# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**அதி விசேஷமானது**

අංක 392/9 — 1986 මාර්තු 10 වැනි සඳුදා — 1986.03.10

392/9 ஆம் இலக்கம் — 1986 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 திகதி திங்கட்கிழமை


## பகுதி I : தொகுதி (I)—பொது

### கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

*ச.வ.பி. 16/78*

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்*

உள்ளூராட்சி வீடமைப்பு நிருமாணத்துறை அமைச்சரினால் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு, அச்சட்டத்தின் 8 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் ஒழுங்குவிதிகள்.

ஆர். பிரேமதாச,
உள்ளூராட்சி, வீடமைப்பு,
நிருமாணத்துறை அமைச்சர்.

கொழும்பு,
10.3.1986.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் நகர அபிவிருத்தி அதிகாரசபை (திட்டமிடுதல், கட்டிட) ஒழுங்குவிதிகள் 1986 என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள், அமைச்சரினால் வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தலின் மூலம் அப்போதைக்கு நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக வெளிப்படுத்தப்படும் ஒவ்வொரு இடப்பரப்புக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

திட்டங்களைச் சமர்ப்பித்தல்

3. அபிவிருத்திச் செயற்பாட்டில் ஈடுபடுவதற்காக அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தைப் பெறும் காரணத்துக்காக 8 ஆ என்னும் பிரிவின்கீழ் செய்யப்படும் எல்லா விண்ணப்பங்களும், இவ்வொழுங்குவிதிகளின் I ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்படும் சம்பந்தப்பட்ட படிவத்தில் அதிகாரசபைக்குச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் V ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்படும் கட்டணங்களையும் சேர்த்தனுப்புதல் வேண்டும்.

4. இவ்வொழுங்குவிதிகளின்கீழ் சமர்ப்பிக்கப்படும் எல்லா திட்டங்களும் :—

(i) தகைமைபெற்ற ஆள் ஒருவரால் தயாரிக்கப்பட்டு அவரால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ii) வளவின் அல்லது இடத்தின் சொந்தக்காரரினால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) மும்பிரதிகளில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

5. (i) அதிகாரசபை அவசியமெனக்கருதும் விடயங்களில் 4 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்களின் மேலதிகப் பிரதிகளைச் சமர்ப்பிக்கும்படி தேவைப்படுத்தலாம்.

(ii) கொடுக்கப்பட்ட திட்டங்கள், வரைபடங்கள், விளக்கங்கள், தகவல்கள், விண்ணப்பத்தை திருப்திகரமாக ஆராய்வதற்குப் போதிய விபரங்களை ஏற்பாடு செய்யவில்லையெனக் கண்டால், அதிகாரசபை, அபிவிருத்திச் செயற்பாட்டின் உண்மையான தன்மையை அறிந்துகொள்வதற்கான அது தேவையெனக் கருதும் அத்தகைய மேலதிக விபரங்களையும் திட்டங்களையும் கொடுக்கும்படி தேவைப்படுத்தலாம்.

6. குறித்த ஏதேனும் அபிவிருத்தி செயற்பாடு தொடர்பில் அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்காகச் சமர்ப்பிக்கப்படும் எல்லாத் திட்டங்களும் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும் :—

(1) அபிவிருத்திச் செயற்பாட்டில் கட்டிட வேலை சம்பந்தப்படாதவிடத்து அல்லது அது காணி அபிவிருத்திக்கு மட்டும் படுத்தப்படுமிடத்து

(அ) 1 : 4000 க்குக் குறையாத அளவுத்திட்டத்தையுடைய அருகிலுள்ள வீதிகள் தொடர்பான அமை நிலையத்தின் அமைவிடத்திட்டம்

(ஆ) பின்வருவனவற்றைக் காண்பிக்கும் 1 : 1000 க்குக் குறையாத அளவுத்திட்டத்தையுடைய அமைவிட நில அளவைத்திட்டம் ;

(i) ஏதேனும் கட்டிடங்கள் இருப்பின், அவற்றின் வெளிப் பரிமாணம் உள்ளடக்கப்பட்ட அமை நிலையத்தின் அமைவிடம் ;

(ii) திட்டத்தின் அளவுத்திட்டம், அதன் வட எல்லை அத்துடன் அடுத்துள்ள காணித்துண்டுகளின் மதிப்பீட்டு இலக்கங்கள் ;

(iii) இருப்பிடத்தின் அணுகுவழி ;

(iv) இருக்கும் எல்லா வடிகால்களும், நீர்வழிகளும் ; அத்துடன்

(v) அமைநிலையத்தின் அமைப்பு, புள்ளிமட்டம் தேவையானால் இருப்பிடத்தின் முன்னேயுள்ள வீதியின் அல்லது வீதியின் அளவு.

(இ) உத்தேசிக்கப்பட்ட காணித்துண்டுகளின் உட்பிரிவினை அவற்றின், பரிமாணங்கள், திசை, உத்தேசிக்கப்பட்ட வீதிகளின் அகலம், மட்டங்கள், திறந்த வெளியிடங்கள், ஒதுக்கப்பட வேண்டிய வாழ் வசதிகளுக்கான இடங்கள் அத்துடன் ஒவ்வொரு அமை நிலையம் எந்த பாவிப்புக்குரியதென்பதையும் காட்டுவதான 1:1000 என்பதற்குக் குறைபாத அளவுத் திட்டத்தின்படி ஒரு விபரமான துண்டுதல் வேண்டும்.

(2) அபிவிருத்திச் செயற்பாடு கட்டிட வேலை சம்பந்தமானதாயிருக்குமிடத்து,

(அ) கட்டிட அமைநிலையத்தின் அமைவிடத்தைக் காட்டுவதற்குத் தேவையான சூழவுள்ள இடப்பரப்பின் வரைபடம் ;

(ஆ) 1 : 1000 க்குக் குறைபாத அளவுத்திட்டத்தை உடைய அங்கீகரிக்கப்பட்ட துண்டுத்திட்டம் ;

(இ) 1 : 100 யின் அளவுத்திட்டத்தில் வரையப்பட்ட ஒவ்வொரு மாடிக்குமான தரைத்திட்டம், குறைந்தவொரு அளவுத் திட்டத்தை அவசியமானதாக்கும் வகையில் கட்டிடம் விசாலமானதாக விருக்குமிடத்து, பின்வருவனவற்றை காட்டுவதான 1 : 200 அளவுத்திட்டம் பயன்படுத்தப்படலாம் :—

(i) கட்டிடத்தின் அறைகளினதும், வெவ்வேறு பாகங்களினதும் உருவப் பரிமாணங்களும், அத்துடன் போடப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டிடத்தின் ஒவ்வொரு அறையினதும் பாகத்தினதும் உபயோகமும் ;

(ii) கதவுகளினதும், யன்னல்களினதும் மற்றும் வேறு திறப்புகள் எல்லாவற்றினதும் நிலைகளும், பரிமாணங்களும் ;

(iii) எல்லா உடனல உபகரணங்களும், வடிகால் வழிகளின் அவற்றின் இணைப்புக்களும் ;

(iv) தீ வெளியேறுதல் ;

(v) மின்னல் கம்பி வழங்கல் வழிகளிலிருந்து விடுபடுதல் ;

(vi) கட்டிடத்தின் சுவர்கள், உயர்தரக் கட்டிடமைப்பு தளத்தளம் அத்துடன் கூரைக்கட்டமைப்புக்கு உபயோகப்படுத்தும் பொருட்கள், அவற்றின் அடையாளக் குறிப்பீடுகள்.

(ஈ) பின்வருவனவற்றைக் காட்டும் குறுக்கு நெடுக்கான கட்டிடத்தின் தோற்றப் பகுதிகள்:—

(i) சுவர்கள், தரை, கூரை, அத்திவாரம் உத்தரம் ஆகியவற்றினதும் அத்துடன் கட்டிடத்தின் இயைபான வேறு பாகங்களினதும் தடிப்பு;

(ii) கதவுகள், யன்னல்கள் அல்லது வேறு திறப்புக்களின் பரிமாணங்களும் நிலைகளும், ஒவ்வொரு மாடியினதும் உயரம் கட்டிடத்தில் உள்ள தரையின் அல்லது வீதி மட்டத்துடன் சம்பந்தப்பட்ட கூரை உட்பக்க (விதானம்) உயரம் அத்துடன் கட்டிடத்தின் அமைவுநிலைய எல்லைகளுக்கும் வெளிச் சுவர்களுக்குமிடையிலான வெளிவான தூரங்கள்;

(உ) அமைநிலையத்தில் உள்ள ஒவ்வொரு கட்டிடத்தையும் அதன் உயரம் தரைமட்டம் அத்துடன் தென்படும் வேறு கட்டிடத்தின் வெளி அம்சங்களையும் காட்டும் அதன் முகப்புப் பக்க நிலைப்படங்கள்.

(ஊ) மழைநீர் வெளியேறும் விதம் ;

(எ) கட்டிடம் நிச்சயமாக குளிரூட்டப்பட வேண்டுமா ; அத்துடன்

(ஏ) கூறப்படும் அபிவிருத்திச் செயற்பாட்டின் தன்மையை அறிந்துகொள்ளும்பொருட்டு, சபையானது தன்னைத் திருப்தியடையவும் வண்ணம் கட்டிடம் தொடர்பிலான அத்தகைய வேறு விபரங்களையும், தகவல்களையும் தேவைப்படுத்தலாம்.

7. எல்லா திட்டங்களும் ஒழுங்காகவும் உண்மையாக மையினால் வரையப்பட்டு பின் அச்சில் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும். அத்துடன் உத்தேசிக்கப்பட்ட புதிய கட்டிட வேலைகளையும் வைத்திருக்கப்படவேண்டிய அல்லது நீக்கப்படவேண்டிய அம்சங்களையும் கட்டிடத்தின் எல்லா பாகங்களையும் உள்ளடக்கி வண்ணத்தினால் என் குறிப்பிட்டதும் தெளிவாகக் காட்டுதல்வேண்டும்.

### கட்டிட வகுதிகள்

8. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக, கட்டிடங்கள் பின்வருமாறு வகுக்கப்படுதல் வேண்டும்.

1. வகுதி அ—கீழ்த்தளத்தை உள்ளடக்கிய ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட மாடிகளைக்கொண்டிருக்கும் அல்லது அடுத்துள்ள வீதிக்கு மேலாக பதினைந்து மீட்டரை விஞ்சும் உயரம் உடைய ஏதேனும் கட்டிடமாகும்.

2. வகுதி ஆ—உயரொழுச்சிக் கட்டிடமாயிராத பின்வருவனவற்றை உள்ளடக்கியதாகும்.

(i) ஓர் அடித்தளம் ;

(ii) ஆதன எல்லையில் சுவர் அல்லது நிரல் அமைந்துள்ள கீழ்த்தளத்தை உள்ளடக்கிய இரண்டு அல்லது மேற்பட்ட மாடிகள் ;

(iii) பாரமுள்ள அல்லது தெப்ப அத்திவாரம் ;

(iv) பத்து மீட்டரை விஞ்சும் கூரைத் தாங்கி இடைத்தூரம்.

(v) பொதுக்கூட்ட இடம் அல்லது பொதுக்கட்டிடம் ;

(vi) பண்டகசாலைகள் அல்லது தொழிற்சாலைகள் போன்றதான காற்றுப்புகாத கட்டிடங்கள் ;

(vii) 'அ' அத்துடன் 'ஆ' வகுதிகளினுள் உள்ளடக்கப்படாத ஏதேனும் வேறு விசேடமான கட்டிடங்கள்.

3. வகுதி இ—(i) வர்க்கம். ஆ(II)ன் கீழ் உள்ளடக்கப்படாத தும், அளவில் முன்னூறு சதுரமீட்டரை விஞ்சாததுமான ஏதேனும் வதிவிடக் கட்டிடத்தை உள்ளடக்கும்.

(ii) வர்க்கம் ஆ(II)னுள் உள்ளடக்கப்படாததும் அளவில் நூறு சதுர மீட்டரை விஞ்சாததுமானதுமான வதிவிட கட்டிடம் தவிர்ந்த ஏதேனும் கட்டிடத்தை உள்ளடக்கும்.

### கட்டமைப்பு, சேவைத்திட்டங்களைச் சமர்ப்பித்தல்

9. (1) ஒரு விண்ணப்பதாரர், 'இ' வகுதிக்குட்பட்ட கட்டிடங்கள் தவிர்ந்த ஏனைய எல்லா கட்டிடங்கள் தொடர்பாகவும் ஏதேனும் கட்டிட வேலையை ஆரம்பிக்குமுன்னர், கட்டிடத்தின் கட்டமைப்புத்திட்டத்தை, திட்டமிடப்பட்ட கணக்கீடுகள் பிரதியுடன் சேர்த்து சமர்ப்பித்தல்வேண்டும்.

(2) விரிவான கட்டமைப்புத் திட்டங்களும் திட்டமிடப்பட்ட எனக்கிடுதலும் அத்தகைய திட்டங்களைத் தயாரித்த தகைமை பெற்ற ஆளினால் தயாரிக்கப்பட்டு கையொப்பமிடப்படுதலும் வேண்டும், 8 ஆம் ஒழுங்குவிதியின் பகுதி 'அ' வில் குறித்துரைக்கப்படும் எல்லா கட்டிடங்கள் தொடர்பிலும், 8 ஆம் ஒழுங்குவிதியின் பகுதி 'ஆ' வில் குறித்துரைக்கப்படும் கட்டிடங்கள் தொடர்பிலும் அதிகாரசபை தேவைப்படுத்தினால் அவை பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல்வேண்டும்.

(அ) ஒவ்வொரு மாடித்தளம் அல்லது அத்திவாரம் தாங்கக் கூடிய ஏற்றிய பரிசீலனைபற்றிய கூற்று;

(ஆ) செய்யப்பட்ட ஏதேனும் மண்பரிசோதனையின் விபரங்கள், மண்ணின் கொள்ளளவு நிர்ணயத்துக்கான கணக்கிடுதல்களும் விளக்கங்களும்; அத்துடன்

(இ) பாவிக்கப்படவுள்ள அத்திவார வகை அல்லது வகைகள்.

(3) ஏதேனும் குளிரூட்டல் அல்லது எந்திரமுறைக் காற்றோட்ட ஒரு கட்டிடத்தில் அல்லது அதன் பாகத்தில் நிறுவப்படவுள்ள போது, அல்லது ஏதேனும் அதன் அத்தகைய முறைமை விஸ்தரிக்கப்பட அல்லது திருத்தியமைக்கப்படவுள்ளபோது, செய்யப்படவுள்ள விஸ்தரிப்பு, திருத்தியமைத்தல், நிறுவுதல் சம்பந்தமான விரிவான திட்டங்களையும் தனவிடுதலையும், கொள்ளளவு சம்பந்தமான தரவுகளையும் சேர்த்து, நிறுவப்படவுள்ள, விஸ்தரிக்கப்படவுள்ள அல்லது திருத்தியமைக்கப்படவுள்ள முறைமை அக்கட்டிடத்தில் செயற்படுமோ அக்கட்டிடத்தின் திட்டத்துடன் இணைந்த அங்கீகாரத்துக்கென அதிகார சபையிடம் சமர்ப்பித்தல்வேண்டும்.

(1) விண்ணப்பதாரர், பகுதி 'அ' வில் குறிப்பிடப்படும் எல்லா கட்டிடங்கள் தொடர்பிலும், பகுதி 'ஆ' தொடர்பிலான கட்டிடங்களை அதிகாரசபை தேவைப்படுமிடத்தும், நீர்வழங்கல் கழிவுக் கால்வாய் வடிகாலமைப்பு, மின்சாரம் தொடர்பிலான சேவைத் திட்டத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். கட்டிடவேலை ஆரம்பிக்கப்படுமுன்னர் இத்திட்டம் சேவைக்கான தகைமைபெற்ற பொறியியலாளரினால் முறையாகக் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

முதனிலைத் திட்டமிடல் ஒழிப்பும் திட்டங்களின் அங்கீகாரமும்

10. (1) முதனிலைத் திட்டமிடல் ஒழிவு எழுத்திலிருக்க வேண்டுமென்பதுடன், விதிக்கப்படக்கூடியதான அத்தகைய கட்டுப்பாடுகளையும் நிபந்தனைகளையும் உள்ளடக்குதல் வேண்டும்.

(2) அது ஒரு வருடகாலத்துக்குச் செல்லுபடியானதாதல் வேண்டும்.

(3) முதனிலை ஒழிப்பு ஓர் அனுமதிப்பத்திரமாக இயங்காது. அத்துடன் அது விண்ணப்பதாரரை அல்லது வேறு எவரேனும் ஒருவரை ஏதேனும் அபிவிருத்திச் செயற்பாட்டை ஆரம்பிக்க எவ்விடத்திலும் அதிகாரமுடையவராக்காது.

(4) அளிக்கப்படும் ஒவ்வொரு அபிவிருத்தி அனுமதிப்பத்திரமும் எழுத்தில் இருக்கவேண்டும் என்பதுடன் அதில் குறிக்கப்படும் கட்டுப்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைந்ததாதலும் வேண்டும்.

(5) ஒவ்வொரு அனுமதிப் பத்திரமும் ஒரு வருடகாலத்துக்கு செல்லுபடியானதாதல் வேண்டும்.

(6) அதிகாரசபையானது, செய்யப்படும் விண்ணப்பத்தின் மீதும், V ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்படும் கட்டணம் செலுத்தப்பட்டதன்மேலும், அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடு ஆரம்பிக்கப்படுவதற்கு எதிர்பாராத காரணங்களினால் முடிக்கப்படாதிருந்தால் என திருப்தியடைந்தால் அது செல்லுபடியாதலை இரண்டு வருடங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு நீடிக்கலாம்.

மறுப்புக்கெதிரான மேன்முறையீடு

11. அனுமதிப்பத்திரத்தை வழங்க மறுக்கும் அதிகார சபையின் தீர்ப்பினால் பாதிப்புறும் எவரேனும் ஒருவர், அத்தகைய மறுப்புக்கான அறிவித்தல் கிடைத்த முப்பது நாட்களுக்கிடையில் அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்துடன் இணையவேண்டியிருத்தல்

12. (1) எந்த அபிவிருத்திச் செயற்பாடும் அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்துக்கு முரணாக ஆரம்பிக்கப்பட அல்லது கொண்டு நடாத்தப்பட முடியாது.

(2) அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பின்வரும் சந்தர்ப்பங்களில், அதிகாரசபையினால் ரத்துச்செய்யப்படலாம் :—

(அ) அனுமதிப் பத்திரத்தின் நியதி அல்லது நிபந்தனை மீறப்படல் ;

(ஆ) இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் மீறப்படல் ;

(இ) விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம், திட்டம் அல்லது வேறு ஆவணங்கள் பொய்யாகப் புனையப்படல் ; அல்லது

(ஈ) 9 ஆம் ஒழுங்குவிதியின்கீழான திட்டத்தை அல்லது வேறு விபரங்களைக் கொடுக்கத் தவறுதல்.

பொருத்தமான இருப்பிடம்

13. எந்த அபிவிருத்திச் செயற்பாடும் பின்வருவன தொடர்பில் கொண்டு நடாத்தப்படுதலாகாது :—

(அ) அமைந்திடம் கழிவு, மிருக அல்லது தாவரவர்க்கங்கள் முதலானவற்றால் நிரப்பப்பட்டிருக்குமாயின், அத்தகைய பொருட்கள் முற்றாக அகற்றப்பட்டாலன்றி அல்லது முழு தரைத்தளமும் நிகழ்த்தாக ஆக்கப்பட்டு மண்ணினால் அல்லது பொருத்தமான முப்பது சென்றி மீட்டர் தடிப்புடைய வேறு ஏதேனும் பொருளினால் மூடப்பட்டிருக்கு மாயன்றியதான இருப்பிடம் ;

(ஆ) வெள்ளத்துக்குட்படக்கூடிய அமைந்திடமொன்று, அபிவிருத்தியினால் அல்லது கட்டிடத்தினால் மேவப்படும் நில மட்டம் வரையிலும் அதன்மேல் சுற்றிலும் மூன்று மீட்டர் தூரம் வரையில் அல்லது அமைந்திடத்தின் எல்லை வரையில் இவற்றுள் எது கிட்டியதோ அது வரையில் அமைந்திடத்தின் அதியுயர்வுடையதான வெள்ளமட்டத்துக்கு மேலான முப்பது சென்றிமீட்டர்களுக்கு உயர்த்தப்படாத அத்தகைய அமைந்திடம்.

அமைந்திடத்தைப் பயன்படுத்தல்

14. அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றி, இருக்கும் அல்லது நிர்மாணிக்கப்படவுள்ள ஏதேனும் அமைந்திடம் அல்லது கட்டிடம் பயன்படுத்தப்படுதலாகாது. எந்த நோக்கத்துக்காக அங்கீகாரம் வழங்கப்பட வேண்டுமென்பதை நிர்ணயிப்பதற்காக அதிகாரசபையானது அபிவிருத்தி இடப்பரப்புக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் அபிவிருத்தித் திட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது வரைந்திருக்கப்பட்டுள்ள ஓர் அபிவிருத்தித் திட்டத்தின் ஏற்பாடுகளைக் கவனத்திற்கெடுத்தல் வேண்டும். அதிகாரசபையானது அத்தகைய ஏதேனும் திட்டமொன்று பெறமுடியாதவிடத்து, அவ்விடப்பரப்பின் எதிர்கால காணிப் பயன்பாட்டையும் வளர்ச்சியையும் சேர்த்து இடப்பரப்பின் தன்மையைக் கவனத்திற்கெடுத்தல் வேண்டும்.

நிலப்பரப்பு வீதம்

15. (1) ஏதேனும் அபிவிருத்தி இடப்பரப்புக்கான அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் அபிவிருத்தித் திட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது கவனத்திற்கெடுத்துக்கொள்ளப்பட்டுள்ள ஏதேனும் அபிவிருத்தித் திட்டத்தின் ஏற்பாடுகள் ஏதேனும் நில இடப்பரப்புமீது அனுமதிக்கப்படக்கூடிய ஆகக்கூடிய நிலப்பரப்பு வீதத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆயின், அத்தகைய திட்டங்கள் எதுவும் பெறப்படாதவிடத்து, அனுமதிக்கப்படக்கூடிய ஆகக்கூடிய தள இடப்பரப்பு வீதம், இடப்பரப்பில் கட்டப்படவுள்ள கட்டிடங்களின் தன்மையையும், அமைந்திடத்தின் இடவமைவு, வீதிக் கட்டமைப்பு முறைமையின்

கொள்ளளவு ஆகியவற்றைக் கவனத்திலெடுத்துத் தீர்மானித்தல் வேண்டும்; ஆயின், ஏதேனும் நிலைய இடப்பரப்புக்காக அனுமதிக்கக்கூடிய நிலப்பரப்பு வீதம் 2 : 5 ஐ விஞ்சுதலாகாது.

ஆயின், மேலும் சில விசேட தருணங்களில், சந்தர்ப்பம் அனுமதியளிக்குமாயின், இடப்பரப்பின் இழைமுறிக் கட்டமைப்பு முறைமையின் கொள்ளளவையும், காணிப்பெறுமதியையும் கவனத்தி லெடுத்து திட்டமிடற் குழுவினால் தீர்மானிக்கப்படும் சேவை விற்பனவைச் செலுத்துவதன்மேல், அமைவிடத்துக்கான நிலப்பரப்பு வீதம் மூப்பது சதவீதம் வரை அனுமதிக்கப்படலாம்.'

(2) (வாகனங்கள்) நிற்பாட்டலுக்கான அத்துடன் குளிரூட்டிப் பொறித்தொகுதிக்கான இடவமைவு அல்லது வேறு ஏதேனும் எந்திர சேவைக்காக உபயோகிப்பதற்கான அடித்தளம், அனுமதிக்கப்படக்கூடிய நிலப்பரப்பு வீதத்துக்கு மேலதிகமாக அனுமதிக்கப்படலாம்.

இவ்வொழுங்குவிதிகளின் II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்படுவது போல இவ்வொழுங்குவிதிகளின் கீழ் ஒரு கட்டடத்தின் நில மட்டத்தில், ஒரு நிரந்தர நிற்பாட்டல் இடம் ஏற்பாடு செய்யப்படுமாயின், அத்தகைய நிற்பாட்டல் நிலப்பரப்பு வீதக் கணிப்பிலிருந்து தவிர்க்கப்படுதல் வேண்டும்.

### அணுகு வழி

16. (1) வீதியை ஊடறுத்துச் செல்லும் ஒன்பது மீட்டர் அகலத்தை விஞ்சாத எந்த அமைவிடமும் அல்லது காணித்துண்டும், ஒழுங்குவிதி 16(2)ஆ வின் கீழ் ஏற்பாடுசெய்யப்படும் விதத்திலன்றி வதிவிடமற்ற பாவிப்புக்கு அல்லது கட்டட நிருமாணித்தற்காக உபயோகப்படுத்தப்படுதலாகாது.

(2) (அ) வசிப்புமனைப் பிரிவுகளாக இயக்கப்படவுள்ள ஒவ்வொரு வீதியும் III ஆம் அட்டவணையின் 'அ' படிவத்தில் எடுத்துக் காட்டப்படும் அளவுத்திட்டங்களுடன் இயைபானவையாயிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) வதிவிடமற்ற பாவிப்புக்கான கட்டட நிருமாணித்தலுக்காக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காணித்துண்டங்களாக இயங்கவுள்ள ஒரு வீதி, 9 மீட்டர் அகலத்துக்கு குறையாத அணுவழியுடன் அனுமதிக்கப்படலாமென்பதுடன் அது III ஆம் அட்டவணையின் 'ஆ' படிவத்தில் எடுத்துக்காட்டப்படும் அளவுத்திட்டங்களுடன் இயைபானவையாயிருத்தலும் வேண்டும்.

ஆயின், III ஆம் அட்டவணையில் எடுத்துக்காட்டப்படும் வதிவிடத்துக்கான காணித்துண்டத்தின் ஆகக்குறைந்த அணுகுமுறை வசிப்புமனைத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் ஒருவருக்குப் பெரும் கஷ்டம் விளைவிமென தவிசாளர் அபிப்பிராயப்படுமிடத்து பின்வருவனவற்றுக்கமைவாக, உள்ளூரதிகாரசபையின் விதப்புரைகளின் மீதும் திட்டமிடல் குழுவின் ஒப்புதலுடனும், 2 மீட்டருக்கு மேற்படாதவாறு அணுகுவழியின் ஆகக்குறைந்த அகலம் குறைக்கப்படலாம்.

(i) ஆகக்குறைந்த மூன்று மீட்டர் அகலம் அணுகுவழிக்காக கிடைக்கக்கூடியதாயிருத்தல் ;

(ii) இக்குறைப்பு ஒரு புது உப பிரிவினை விடயத்திற்கு ஏற்புடையதாகாது ;

(iii) இடப்பரப்பு அரை ஏகர் தன்மையானதாதல்.

(3) அத்தகைய ஒவ்வொரு வீதியும் ஒன்பது (9.0) மீட்டர் அகலத்துக்குக் குறையாத பொதுப் (வீதி) பாதையுடன் அல்லது ஒரு தனிப்பட்ட வீதியின் சொந்தக்காரர் ஒன்பது (9.0) மீட்டர் அகலத்துக்குக் குறையாத பொது வீதியின்மீதாக வழிப்பாதையுடையவராயுள்ளாரோ அந்த தனிப்பட்ட வீதியுடன் இணைக்கப்படல் வேண்டும்.

(4) அகலத்தில் ஒன்பது (9.0) மீட்டருக்குக் குறைவானதும், நீளத்தில் மூப்பது மீட்டருக்கு மேற்பட்ட நீளத்தையுடையதுமான ஒவ்வொரு வீதியும், கடைசி எல்லையில் (9.0) ஒன்பது மீட்டருக்குக் குறையாத விட்டத்திலுள்ள திருப்புமூலைக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

### காணித்துண்டங்களுக்கான அளவுத்திட்டம்

17. (1) உயரெழுச்சிக் கட்டிடங்களல்லாத வெவ்வேறு வகையான கட்டடங்களுக்கான காணித்துண்டங்களில் ஆகக்குறைந்த எல்லையும் ஆகக்குறைந்த அகலமும் அதிகாரசபை கூடிய அல்லது ஆகக்குறைந்த எல்லையை அத்துடன்/அல்லது இடப்பரப்பில் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்படவுள்ள அபிவிருத்தித்திட்டத்தில் கூடிய அல்லது குறைந்த அகலமான காணித்துண்டங்களை அளவுகளைக் குறிப்பிட்டாலேயன்றி III ஆம் அட்டவணையின் 'இ' படிவத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள அளவுத்திட்டத்துடன் இயைபானவையாயிருத்தல் வேண்டும்.

(2) வீதியொன்றின் கடைசித் தொங்கலை ஊடறுக்கச் செல்லும் ஒவ்வொரு காணித்துண்டம் அல்லது அமைவிடம் III ஆம் அட்டவணையின் 'இ' படிவத்திலுள்ள அளவுக்குக் குறையாது முகப்பையுடையதாயிருக்க ஆனால், வீதிக்கோட்டுக்குச் சென்றுதக (3.0) மீட்டர் அகலத்துக்குக் குறையாத முகப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) அதிகாரசபையானது ஏற்கனவேயுள்ள காணித்துண்டத்தின் விடயத்தில் குறித்துரைக்கப்பட்ட இடவமைவின் எல்லையினதும் அகலத்தினதும் தேவைப்பாடுகளைத் தளர்த்தலாம். ஆயின் வேறு ஒழுங்குவிதிகளைத் திருப்திப்படுத்தும் ஒரு கட்டடம் அமைவிடத்தில் கட்டப்படலாம்.

### கட்டடங்களின் உயரம்

18. (1) அகலத்தில் (6.0) ஆறு மீட்டரை அல்லது அதற்குக் குறைந்த அகலத்தையுடைய அல்லது அளவில் எல்லையில் நூற்றைம்பது (150) சதுரமைலையுடைய காணித்துண்டத்தில் அமைந்துள்ள ஒரு கட்டடத்தின் ஆகக்கூடிய உயரம் அதிகாரசபை வேறு வகையாகப் பணித்தாலன்றி, ஏழரை (7.5) மீட்டரை அல்லது இரண்டு மாடிகளை விஞ்சுதலாகாது.

(2) உயரெழுச்சிக் கட்டடங்களல்லாத வேறு கட்டடங்களைப் பொறுத்தவரையில் ஒரு கட்டடத்தின் ஆகக்கூடிய உயரமானது பதினைந்து (15) மீட்டரை அல்லது ஒரு கட்டடத்தின் ஒரு மாடிக்கு ஊடறவும் வீதியின் தொய்கம் மூலைக்குமிடையிலான இருமடங்கு தூரத்தை எது குறைந்ததோ அதனை விஞ்சுதலாகாது.

(3) காணித்துண்டு ஒரு மூலையில் அமைந்திருக்குமாயின் கட்டடத்தின் உயரமானது, அது அகலமான வீதியிலிருந்து 20 மீட்டர் அகலத்துக்கு குறுகிய வீதியின்மீது ஊடறுக்கச் செல்வதைப் பொறுத்தவரையில் அல்லது ஊடறுக்கச் செல்லுமாயின் அத்தகைய வீதிகளுள் அகலமான வீதியினால் ஒழுங்குபடுத்தல் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதியின்கீழ் உயரத்தை அளவிடும்போது, அகலத்தில் ஆறு (6) மீட்டர் உயரத்தையும் பரப்பில் ஐம்பத்தைந்து (55) சதுரமீட்டரை விஞ்சாததுமான ஒரு மோட்டார் அறை அல்லது பாரந்தூக்கி அல்லது ஐந்து மீட்டர் உயரத்தை விஞ்சாததும் பரப்பில் 25 சதுரமீட்டரை விஞ்சாததுமான ஒரு படிக்கட்டு அறை அல்லது 1.5 மீட்டர் உயரத்தை விஞ்சாத ஒரு தண்ணீர்த் தொட்டி ஆகியவை அவதானிக்கப்படல் கூடாது

### வீதி வழிகளும், கட்டட வழிகளும்

19. (1) ஏதேனும் சட்டத்தின்கீழ் அல்லது ஒழுங்குவிதிகளின் கீழ் ஏதேனும் வீதிக்கான வீதி வழி தீர்மானிக்கப்பட்டிராதவிடத்து, அதிகாரசபையானது ஏற்கனவே உள்ளதும், செய்யப்படவுள்ளதுமான அபிவிருத்தியின் தன்மையையும் இயல்பையும் அத்துடன் அத்தகைய வீதியில் எதிர்பார்க்கக்கூடிய போக்குவரத்து நெருக்கடியையும் கணக்கிலெடுத்து அத்தகைய வீதிக்கான வீதி வழியை தீர்மானிக்கலாம்.

(2) வீதியை ஊடறுக்கச் செல்லும் பக்கத்திலுள்ள ஒவ்வொரு காணித்துண்டுக்குமான கட்டடவழி, III ஆம் அட்டவணையின் 'ஈ' படிவத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள அளவுத்திட்டங்களுடனும் வருநிலைகளுடனும் இயைபானவையாய் இருத்தல் வேண்டுமென்பதுடன் அது எவ்வீதியை ஊடறுக்கச் செல்கிறதோ அவ்வீதி அதிகாரசபையினால் உள்ளூர் அல்லது இரண்டாந்தர அல்லது முதன்மையானதாக எவ்விதம் வகுப்பிடப்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் கொண்டு தீர்மானிக்கப்படுதலும் வேண்டும். உள்ளூர் தொகுப்புகளைப் பொறுத்தளவில் III ஆம் அட்டவணையின் 'ஈ' படிவத்தில் சொடுக்கப்பட்டுள்ளதை விடக் குறைந்தளவான அகலம் அனுமதிக்கப்பட

ளம். ஆயின், அங்ஙனம் குறைக்கப்பட்ட அளவானது இடப்பரப்புக்கான அங்கீகரிக்கப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்டத்துடன் இயைபுடையனவாயிருத்தல் வேண்டும்.

(3) காணித்துண்டு ஊடுருவிச் செல்லும் வீதி உள்ளூரானதா, இரண்டாந்தரமானதா அல்லது முதன்மையானதா என்பது அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(4) எந்த கட்டடமும் கட்டட வழிக்கு அப்பாற்செல்லுதல் ஆகாது. ஆயின் மூன்மண்டபம் மேற்கட்டு அல்லது கட்டட வழிக்கும் வீதி வழிக்கும் இடையிலான 1.0 மீட்டர் அகலத்துக்கு மேற்படாத தாழ்வாரம், அத்துடன், இரண்டு மீட்டர்களுக்கு மேற்படாத உயரத்தையுடைய எல்லைச் சுவர் அல்லது வேலி வீதி வழியில் அனுமதிக்கப்படலாம்.

(5) உள்ளூர் அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது அனுமதியளிக்கப்பட்ட ஏதேனும் வீதிவழி, அதிகாரசபையின் முன்னங்கீகாரமின்றி வேறுபடுத்தப்படமுடியாது.

காணி உப-பிரிவிடுகை

20. (1) (அ) விவசாயம் அல்லது தோட்ட வேளாண்மை தவிர்ந்த வேறு ஏதேனும் உபயோகத்துக்காகப்பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப்படவுள்ள எந்த காணியின் பகுதி அல்லது காணித்துண்டு அத்தகைய உப பிரிவிடுகைக்கான திட்டம் அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலேயன்றி உப பிரிவிடப்படுதலாகாது.

(ஆ) ஒரு காணியை உப பிரிவிடுகை செய்ய எண்ணும் எவரேனும் ஒருவர் 6 ஆம் ஒழுங்குவிதியின் தேவைப்பாடுகளுடன் இயைவானவையான ஒரு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) அதிகாரசபை காணி உப பிரிவிடுகைக்கான திட்டத்தை அங்கீகரிக்கும்போது, தான் தேவையெனக் கருதினால் திட்டத்தைத் திருத்தும்படி விண்ணப்பதாரரைத் தேவைப்படுத்தலாம். அதிகாரசபையினால் அங்கீகாரமளிக்கப்பட்ட பின்னரே அமைதியத்தில் உபபிரிவிடுகை மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) காணித்துண்டுகளின் ஆகக்குறைந்த அளவும், அகலமும், 17 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கிணங்க இருத்தல் வேண்டும்.

(4) அத்தகைய உபபிரிவிடுகையில் எந்த காணித்துண்டும் 12 மீட்டர் நீளத்துக்குக் குறைதலாகாது.

(5) எந்த புதிய உப பிரிவிடுகையும் ஏற்கனவே அமைதியத்திலுள்ள ஏதேனும் கட்டடத்தின் இவ்வொழுங்குவிதிகளின் கீழான தேவைப்பாடுகளை அல்லது திறந்த வெளியிடத்தை அல்லது வெளிச்சத்தை அல்லது காற்றோட்டத்தைக் குறைப்பதான பயனையுடையதாதல் ஆகாது.

(6) உப பிரிவிடுகைத் திட்டத்திலுள்ள எந்த காணித்துண்டும் எந்த நோக்கத்துக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளதோ அந்த நோக்கந் தவிர்ந்த வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுதலாகாது.

21. (1) ஒரு உப பிரிவிடுகையில் ஒவ்வொரு காணித்துண்டும் ஏற்கனவே உள்ள அல்லது உத்தேசிக்கப்பட்டுள்ள பொது வீதியை அல்லது 16 ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படும் ஒரு வீதியை ஊடுருவிச்செலுத்தல் வேண்டும்.

(2) வீதிகளுக்கான ஆகக்குறைந்த வண்டிப்பாதை ஒதுக்கீடத்தின் அகலம் அதிகாரசபை அங்கீகரித்ததன்படி இருத்தல் வேண்டும். ஆறுக் 9.0 மீட்டர் வரையிலான அகலமுடைய வீதிகளைப் பொறுத்த மட்டில் அது 3.6 மீட்டருக்குக் குறையாகவும் 9.0 மீட்டரிலும் அகலமாயிருக்குமிடத்து 6.0 மீட்டருக்குக் குறையாததாகவும் இருத்தலாகாது.

22. (1) உப-பிரிவிடுகையிடப்படவுள்ள காணியின் அல்லது அமைதியத்தின் ஒரு பகுதி 1.0 ஹெக்டயர் விஞ்சுமிடத்து வீதிகள் நீங்கலான காணியின் அல்லது அமைதியத்தின் பத்து சதவீதத்துக்குக் குறையாத ஒரு இடப்பரப்பு நேரான அமைவிடத்தில் சமூக பொருளுதவிக்கு பாவிப்பவனுக்கென ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய ஒதுக்கீடம் எவ்வித கட்டணமுமின்றி அதிகாரசபைக்குரித்தாக்கப்படுதல் வேண்டும்.

23 உப பிரிவிடுகையில் எந்த காணித்துண்டும், வீதிகள் எல்லைக் கோடிடப்பட்டு, அவற்றின் முழு அளவுக்கும் விரிவாக்கப்பட்டு அதிகாரசபையின் திருப்திக்கேற்ப அபிவிருத்தி செய்யப்பட்டாலேயன்றி, பாவிப்புக்கு விடப்படவோ அல்லது கட்டப்படவோ ஆகாது.

தொடர்மாடிக்கும், வதிப்பிட மனைகளுக்குமான தனவிதிகள்

25. (1) அதிகாரசபை தொடர்மாடிகளை நிருமாணிப்பதற்கான அல்லது வதிப்பிடமனைகளை நிருமாணிப்பதற்கான கருத்திட்டங்களையும் அத்துடன் கவனத்திற்கெடுக்கப்பட்டுள்ள இடப்பரப்புக்கான அபிவிருத்தித் திட்டத்துடன் இயைவானவையாயுள்ள ஒருங்கிணைந்த வேறு ஏதேனும் கருத்திட்டங்களையும் அங்கீகரிக்கலாம்.

(2) அதிகாரசபை ஏதேனும் தனவிடமே அல்லது வீடமைப்புக்கான அல்லது குடிசை, மக்களிடுகளின் மீள் வீடமைப்புக்கான அல்லது குறைந்த வருமானமுள்ளவர்களின் வீடமைப்பு கருத்திட்டங்களை அவை கவனத்திற்கெடுக்கப்பட்டுள்ள இடப்பரப்புக்கான அபிவிருத்தித் திட்டத்துடன் இயைவாயிருக்குமிடத்து அவற்றை அங்கீகரிக்கலாம்.

கட்டடங்களைச் சுற்றியுள்ள திறந்தவெளியிடங்கள்

25. அட்டவணை III இன் 'உ' படிவத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நோக்கங்களுக்காக ஏதேனும் அமைதியத்தில் அனுமதிக்கப்படத்தக்கதான ஆகக்கூடிய மூடப்பட்ட காணித்துண்டானது அதில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இயைவானவையாயிருத்தல் வேண்டும்.

26. (1) ஒவ்வொரு கட்டடத்தினதும் பின்புறத்தில், கட்டடத்தின் பின்புறமானது, அகலத்தில் 6 மீட்டர்களுக்குக் குறையாமல் பகிரங்க வீதியொன்றின்மீது ஊடுருவிச் செல்லுவேயொழிய கட்டடத்தின் முழு அகலத்துக்கும் விசாலிப்பதாக 3 மீட்டர்களுக்குக் குறையாத திறந்தவெளியொன்றை அக்கட்டடம் அதற்குப் புறநீங்கலாகச் சொந்தமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின் நோக்கத்துக்காக கட்டடத்தின் பின்பகுதி, கட்டடம் அமைந்துள்ள ஏதேனும் வீதிக்கு தூரமாக உள்ள முகப்பு எனக் கருதப்படுதல் வேண்டும்.

(3) ஒரு மீட்டர் அகலத்தை விஞ்சாத சாய்வு நெம்புகோலிடப்பட்ட சூரிய ஒளித்தடுப்பு அல்லது தொங்கும்மாடி முகப்புக்கள் தவிர்ந்த வேறு ஏதேனும் கட்டமைப்பு எதுவும் அல்லது கட்டடம் எதுவும் அத்தகைய திறந்தவெளியாங்கில் அனுமதிக்கப்படலாகாது.

(4) ஒழுங்கற்ற வடிவங்களுக்கு அமைதியங்களில், பின்னுள்ள முழுக்காணியின் அளவுக்கும் ஒரு திறந்தவெளியை ஏற்பாடுசெய்வது சாத்தியமற்றதாயிருக்குமிடத்து, அதிகாரசபையானது, விடயத்தின் நேர்வுகளைக் கருத்திற்கொண்டு தான் நேரானதெனக் கருதும் திறந்தவெளியை பின்னும் விடும்படி பணிக்கலாம்.

(5) அனுகுவழிக் கட்டடத்தின் பராமரிப்பு அடுத்துள்ள ஆதனங்களிலிருந்து வேறு பிரித்தல் ஆகிய நோக்கங்களுக்காக அமைதியத்தில் ஒரு திறந்தவெளி ஏற்பாடுசெய்ய எண்ணப்பட்டுள்ள கட்டடங்களின் விடயத்தில் அத்தகைய திறந்தவெளியானது எக்காரணத்தைக்கொண்டும் 80 சென்றிமீட்டர் அளவுக்குக் குறைதலாகாது.

உயரெழுச்சிக் கட்டடங்களுக்கான மேலதிகத் தேவைப்பாடுகள்

27. (அ) அமைதியம் அளவில் 1000 சதுர மீட்டரை விஞ்சாது, அத்துடன் குறுகிய பாதைப்பெர்க்கில் குறைந்த 20 மீட்டர் பரிமாணத்தையும் கொண்டிருக்கும்; அத்துடன்

(ஆ) 12 மீட்டர் அகலத்துக்குக்குறையாத ஒரு வீதியை அமைதியம் ஊடுருவிறும் அன்றி உயரெழுச்சிக் கட்டடத்தை-நிருமாணித்தலுக்கான எந்த திட்டமும் அங்கீகரிக்கப்படுதலாகாது

28. அதிகாரசபை—

(அ) கட்டிடம் அமைவர்களின் வாழ்வசதிகள் வழங்குகையுடன் குறுக்கிடாதென அல்லது இடப்பரப்பின் அமைதியைக் குலைக்காதென ;

(ஆ) கட்டிடம் போக்குவரத்து நெருக்கடிகளையும், இடையூறுகளையும் உருவாக்காதென ;

(இ) நீர் வழங்கல், வடிகால், மின்சாரம், நிலவிருத்தும், அத்துடன் மற்றைய வசதிகள் நிறுத்திவைத்தலுக்குமாறு இடையூறுகளிலிருந்து பாதுகாப்பு போன்றவைக்கான போதிய ஒழுங்குகள் ஏற்பாடுகள் செய்யப்படாதுமென

திருப்தியுற்றும், அத்தகைய ஏதேனும் அமைவிடத்தில் உயரெழுச்சிக் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படுதலை அனுமதிக்கலாம்.

29. (1) கட்டிடத்தின் ஆகக்கூடிய உயரம், கட்டிடத்தின் ஏதேனும் மாடிக்கும், ஊடறுவும் வீதியின் தூர விளிம்புக்கும் இடையிலான மட்டமான தூரத்தின் இருமடங்கை விஞ்சலாகாது.

(2) கணித்துண்டு ஒரு மூலையில் அமைந்திருக்குமாயின், கட்டிடத்தின் உயரம், அகலமான வீதியிலிருந்து 20 மீட்டர் அகலத்துக்கு ஒடுக்கமான வீதியின்மீது ஊடறுவிச் செல்வதைப் பொறுத்த வரையில், அத்தகைய வீதிகளுள் அகல்மான வீதிகளிலும் ஒழுங்குபடுத்தப்படுதல் வேண்டும்.

30. (1) முன்புறம் அல்லது பின்புறமத்தியான, கட்டிடத்துக்கும் அமைவிடத்தின் எல்லைக்கோட்டுக்குமிடையில் குறைந்தது ஒரு புறத்திலானது குறைந்ததெதுவோ அதாவது கட்டிடத்தின் கால் பங்கு உயரத்தில் அல்லது 5.5 மீட்டரில் அந்த அளவு திறந்த வெளியை ஆகக்குறைந்தது விடுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு கட்டிடத்தின் பின்புறத்திலும் கட்டிடத்தின் முழு அளவுக்கும் நீடிப்பதானதும் கட்டிடத்தின் உயரத்தில் குறைந்தது கால்பங்கொன்றான திறந்தவெளியானது இருத்தல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்படும் திறந்தவெளியானது கட்டிடத்துக்கே புறநீக்கலானதாகும். ஆயின் கட்டிடத்தின் பின்புறத்தின் முழு நீளம் எந்தப் பொது வீதியை ஊடறுவிச் செல்கின்ற அது 6.0 மீட்டருக்குக் குறைந்த அகலமுடையதாயிருக்குமிடத்து அவ்வளவுக்கு கட்டிடத்துக்கு உரித்தான திறந்த வெளியின் முழு அளவும் குறைக்கப்படலாம்.

(4) ஏதேனும் அமைவிடத்தின் எல்லா கட்டிடங்களாலும் மூடப்பட்டுள்ள மொத்த இடப்பரப்பும், அமைவிடத்தின் மொத்த இடப்பரப்பின் 80 சதவீதத்தை விஞ்சலாகாது. அத்துடன் அவ்விதம் மூடப்படாத இடப்பரப்பு கட்டிடத்துக்கே புறநீக்கலாக உரித்தானதாதல் வேண்டும் என்பதுடன் அது அதன் பாகமாகவும், பகுதியாகவும் மீள வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

### நிறுத்துமிடம்

31. (1) அபிவிருத்திச் செயற்பாடுகளைக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக ஒரு அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெறும் பொருட்டு விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு திட்டமும், இவ்வொழுங்குவிதிகளின் II ஆம் அட்டவணையின் குறித்துரைக்கப்படும் வீதங்களில் அமைவிடத்திலுள் குறைந்த எண்ணிக்கையினதாக நிறுத்தும் இடங்களுக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(2) மோட்டார் வண்டி நிறுத்தும் சாலைகளின் பரிமாணங்கள் பின்வருவனவாய் இருத்தல் வேண்டும்.

(அ) சாலையின் ஆகக்குறைந்த அகலம்—2.5 மீட்டர்கள்.

(ஆ) சாலையின் ஆகக்குறைந்த நீளம்—4.8 மீட்டர்கள்.

(இ) இலாரிவண்டி நிறுத்துவதற்கான சாலையின் ஆகக்குறைந்த நீளம்—8.4 மீட்டர்கள்.

(3) அமைவின் ஆகக்குறைந்த அகலமானது III ஆம் அட்டவணையின் 'வ' பகுதியில் குறித்துரைக்கப்படும் தேவைகளுடன் இசைவானவையாயிருத்தல் வேண்டும்.

(4) மோட்டார் வண்டி நிறுத்துமிடத்தின் இடப்பரப்பின் அணுகுவழியின் அகலமானது, நடைபாதையிலிருந்தும் உட்புகுதலும் வெளியேறுதலும் தனித்தனியே ஏற்பாடு செய்யப்பட்டிருப்பின் நடைகளிலிருந்தும் விலைப்படி 3 மீட்டருக்குக் குறைவானதாயிருத்தல் கூடாது என்பதுடன் ஏனைய உட்புகுதலும் வெளியேறுதலும் ஒன்றுக ஏற்பாடு செய்யப்படுமிடத்து 5.5 மீட்டருக்குக் குறைவாயிருத்தலும் வேண்டும்.

(5) சாய்வுகளின் ஆகக்கூடிய சரிவானது எட்டில் ஒன்றைவிட செங்குத்தாயிருத்தலாகாது.

(6) அத்தகைய ஒவ்வொரு சாய்வும் வீதியின் மூலையிலிருந்து 5.0 மீட்டர் தூரத்துக்கு அப்பாலே தொடங்கப்படுதல் வேண்டும்.

(7) சொத்தக்காரர், தேவைப்படுத்தப்படும் எண்ணிக்கையிலான நிறுத்துமிடங்களை அமைவிடத்தில் ஏற்பாடு செய்யமுடியாதவிடத்து அல்லது அதிகாரசபை திருப்திகரமான மோட்டார் நிறுத்துமிடங்கள் அமைவிடத்தில் ஏற்பாடு செய்யமுடியாதென அபிப்பிராயப்படுமிடத்து அமைவிடத்தில் ஏற்பாடு செய்யப்படாத ஒவ்வொரு நிறுத்துமிடத்துக்கும் V ஆம் அட்டவணையின் (7) இல் குறித்துரைக்கப்படும் சேவை விதிப்பனவு செலுத்தப்படுதல் வேண்டும்.

### வீதியின் மூலைகளைச் சுற்றிச் சுவர் ஏற்படுத்தல்

32. அதிகாரசபையானது, எல்லைச் சுவர் அல்லது வேலி உள்ளிட்ட ஏதேனும் கட்டிடத்தின் மூலை, வீதியைப் பயன்படுத்துவோரின் பாதுகாப்பு நலனுக்கு அவசியமான அத்தகைய அளவிலும் உயரத்திலும் இரண்டு வீதிகளின் மூலைகளில் சுற்றிச் சுவரிடப்படுதல் வேண்டும் எனத் தேவைப்படுத்தலாம்.

### கட்டிடக் கலைக் கட்டுப்பாடு

33. (1) அதிகாரசபை அபிவிருத்திச் செயற்பாட்டினைச் சூழவுள்ள அபிவிருத்தியுடன் பொருந்தச் செய்யும்பொருட்டு ஏதேனும் கட்டிடத்தின் உயரம் கட்டிடக்கலை, கட்டிடக்கலையின் இயல்பு அல்லது முகப்பு தொடர்பில் தாம் அவசியமெனக் கருதும் அத்தகைய திருத்தங்களைச் செய்யும்படி சொத்தக்காரரைப் பணிக்கலாம்.

(2) அதிகாரசபை முழுமையாக அல்லது பிரதானமாக அலுவலகங்கள் அல்லது வர்த்தகக் கட்டிடங்களால் ஆளப்படும் ஏதேனும் வீதியில் அதன் அங்கீகரிப்புக்கான ஒரு நிபந்தனையாக அது பணிக்கும் அத்தகைய தன்மையிலும் அத்தகைய அகலத்திலும் கட்டிடத்தின் முகப்பில் ஒரு பொதுப் பின்மாடத்துக்கு ஏற்பாடு செய்யும்படியும் தேவைப்படுத்தலாம்.

(3) அதிகாரசபை, கட்டிடத்தின் மேற்றளத்தில் அமைந்துள்ள ஏதேனும் பொறிமுறையான் அல்லது வேறு இயந்திரங்களைப் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்வதற்கு அவசியமான அத்தகைய விதத்தில் சுட்புலனுக்குத் தெரியும்படியாகப் பணிக்கலாம்.

### சரித்திர, கட்டிடக்கலை நலன் அல்லது நிலத்தோற்றப் பெறுமதியுள்ள இடங்களைப் பேணிக் காத்தல்

34. (1) தொல்பொருள் கட்டளைச்சட்டத்திலும் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் வளவுகள் அல்லது இடப்பரப்பு அல்லது நினைவுச் சின்னம் அதிகாரசபையின் அபிப்பிராயப்படி சரித்திர அல்லது கட்டிடக்கலை நலனைக் கொண்டதெனவுமிருந்தால் அதிகாரசபை விடயத்திற்கேற்றபடி அத்தகைய கட்டிடங்கள், கட்டிட கூறுப்புக்கள் இடப்பரப்பு அல்லது நினைவுச் சின்னங்களைப் பேணிக்காத்தலுக்கும் பொருத்தமானதெனக் கருதும் அத்தகைய பணிப்புக்களைக் கொடுக்கலாம்.

(2) ஏதேனும் வளவு அல்லது இடப்பரப்பு அதிகாரசபையின் அபிப்பிராயப்படி காட்சியமைப்பு அல்லது நிலத்தோற்ற நலனைக் கொண்டுள்ளதாயின், அதிகாரசபை விடயத்துக்கேற்றபடி அத்தகைய வளவுகளை அல்லது இடப்பரப்பினைப் பேணிக்காத்தலுக்கும் பொருத்தமானதெனக் கருதும் அத்தகைய பணிப்புக்களைக் கொடுக்கலாம்

### நிலத்தோற்றத்தையும் மரத்தையும் பேணிக்காத்தல்

35. (1) அதிகாரசபை வாழ்வசதி நலனை முன்னிட்டு ஏதேனும் மரத்தை வெட்டி வீழ்த்துவதையோ தறித்தலையோ அல்லது வேண்டுமென்று அழித்தலையோ அல்லது ஓர் இடப்பரப்பின் குறிப்பிடத்தக்க ஏதேனும் நிலத்தோற்ற முக்கியத்துவத்தை மாற்றுவதையோ தடை செய்யலாம்.

(2) அதிகாரசபை, அபிவிருத்தி அமைவிடத்தின் நிலத்தோற்றத்தை அபிவிருத்தி செய்து அத்துடன் அதற்கு அங்கீகரிக்கப்படும் விதத்தில் அதனைப் பயிரிடவும் செய்யும்படி பணிக்கலாம்.

### விளம்பரக் கட்டுப்பாடு

36. (1) விளம்பரஞ் செய்வதற்காக அல்லது பெயர்ப்பலகைகளைப் பிரதானமாகப் பயன்படும்படி உருவாக்கப்பட்ட அல்லது பயன்படுத்தப்படும் ஏதேனும் குவியல், கட்டமைப்பு அல்லது ஏதேனும் கருவி (உபாயம்), இடப்பரப்பின் வாழ்வசதிகளைப் பேணிக் காத்தலின் நலனுக்குப் பொருத்தமானதென அதிகாரசபை கருதி விதிக்கும் நிபந்தனைகளுக்கு இசைவானவையாயிருத்தல் வேண்டும்.

(2) ஏற்கனவேயுள்ள குவியல், கட்டமைப்பு அல்லது ஏனைய கருவி அதிகாரசபையின் அபிப்பிராயப்படி ஆட்களின் பாதுகாப்புக்கு ஊறுவிளைக்குமெனக் கண்டால் அத்தகைய கும்பலை அல்லது கருவியை அகற்றும்படி அல்லது திருப்புபடுத்தும்படி பணிக்கலாம்.

### விமான நிலையமும் ஏனைய வசதிகளும்

37. (1) அதிகாரசபையானது விமானநிலைய அதிகாரசபையின் ஒப்புதலுடன், விமானநிலையத்துக்கு அருகாமையிலுள்ள கட்டடங்களது அல்லது ஏனைய கட்டமைப்புக்களது உயரத்தினை மட்டுப்படுத்தலாம்.

(2) அதிகாரசபையானது தொடர்பு ஆணையாளர்களின் ஒப்புதலுடன் தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி அல்லது ஒத்த தன்மையினதான சேவைகள் செல்லும் வழியில் அமையும் கட்டடங்களின் உயரத்தை மட்டுப்படுத்தலாம்.

### மின்சார வழிகளிலிருந்து விடுபடுதல்

38. எல்லா கட்டடங்களும் மேலே செல்லும் மின்சார வழங்கல் வழியிலிருந்து பணித்த இழுவை வழிகளின் விடயத்தில் நிலைக்குத்தாக ஆகக் குறைந்தது 2.5 மீற்றர் தூரத்திலும் இடைமட்டமாக 1.5 மீற்றர் தூரத்திலும் பிரிந்து அமைந்திருத்தல் வேண்டுமென்பதுடன் உயர்த்த இழுவை வழிகளின் விடயத்தில் முறையே 4.5 மீற்றர் தூரத்திலும் 3.5 மீற்றர் தூரத்திலும் அமைந்திருத்தல் வேண்டும்.

### கட்டடங்கள்

39. நாற்பதாம் ஒழுங்குவிதியின்கீழ் குறித்துரைக்கப்படும் அறைகள் தவிர்ந்த கட்டடத்திலுள்ள ஒவ்வொரு அறையின் உட்பக்க தெளிவான பரிமாணங்கள் III ஆம் அட்டவணையின் 'ஐ' படிவத்தில் குறித்துரைக்கப்படும் ஆகக் குறைந்த பரிமாணங்களுக்குக் குறைதலாகாது.

40. குளியலறைகளதும் கழிவறைகளதும் உட்பக்க தெளிவான பரிமாணங்கள் III ஆம் அட்டவணையின் 'ஒ' படிவத்தில் குறித்துரைக்கப்படுவனவற்றைவிடக் குறைதலாகாது.

41. (1) சட்டப்படியான காற்றோட்டம் தேவைப்படுத்தப்படாத ஏனைய அறைகள் 2.25 சதுர மீற்றரை விஞ்சும் இடப்பரப்பொன்றையோ வைத்திருக்கலாகாதென்பதுடன், 1.5 மீற்றரை விஞ்சும் அகலத்தை அல்லது நீளத்தையுடையதாயிருத்தலாகாது.

(2) மேற்குறித்துரைக்கப்பட்ட பரிமாணங்களிலான ஏனைய அறைகளின் சராசரி இடப்பரப்பு, கட்டடத்தின் நிலப்பரப்பின் 5 சதவீதத்திற்கு மேற்படுதலாகாது.

42. அறைகளின் ஆகக்குறைந்த உயரமானது பின்வருவனவாயிருத்தல் வேண்டும்:

(அ) கழுவறைகள், குளியலறைகள் அத்துடன் நடை பாதைகள் 2.1 மீற்றருக்கும் குறையாததாயிருத்தல் ;

(ஆ) ஏதேனும் கட்டடத்திலுள்ள ஏனைய எல்லா அறைகளும் 2.7 மீற்றருக்குக் குறையாதிருத்தல், ஆயின் கூரைக்கு அப்பாலும் நீடித்துச் செல்லும் நீராந்தி, தாழ்வாரம் அல்லது ஒத்த தன்மையினதான [illegible] ஏதேனும் மூலையில் 2.4 மீற்றருக்குக் குறைவாக இவ்வுயரத்தைக் குறைக்கும் வண்ணம் இருத்தலாகாது ;

(இ) கட்டடத்தில் மத்திய குளிரூட்டல் முறைமையில் குளிரூட்டப்பட்ட அறைகளைப் பொறுத்தவரையில் 2.4 மீற்றர்.

43. சரிவான கூரையையுடைய அறைகளின் விடயத்தில் உயரமான 42 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட கூரைச் சரிவின் மத்திய புள்ளியிலிருந்து குறைந்ததாதலாகாது என்பதுடன் அறையின் எந்தப் பாகமும் 2.1 மீற்றருக்குக் குறைந்ததுமாதலாகாது.

### படிக்கட்டு

44. (1) படிகளின் ஆகக்குறைந்த அகலமும், அத்துடன் மிதிகளினதும் உயரெழும்பிகளினதும் ஆகக்குறைந்த அகலமும் III ஆம் அட்டவணையின் 'ஒ' படிவத்தில் குறித்துரைக்கப்படும் வண்ணம் இருத்தல் வேண்டும். வட்டமான அல்லது கேத்திரகணிதமான படிக்கட்டுக்களின் விடயத்தில் மிதிகளின் அகலமானது நடுவிலிருந்து அளவிடும்போது மேற்குறிப்பிட்ட அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அளவுக்குக் குறைவானவையாயிருத்தல் கூடாது. உயரெழும்பியின் உயரமும், மிதியின் அகலமும் ஒவ்வொரு மாடியிலும் ஒரே அளவினதாயிருத்தல் வேண்டும்.

(2) (அ) ஆக மேலான தரையிறக்கத்துக்கும் மேல் தளத்திலுள்ள வெளியேறும் கதவுக்குமிடையே ஏதேனும் படிக்கட்டும் எவ்விதத் தடங்கலும் இருத்தலாகாது.

(ஆ) முற்றத்தை, வெறுமையான இடத்தை அல்லது வெளிப்பக்கக் காற்றிடத்தை நோக்கியுள்ள ஒவ்வொரு படிக்கட்டும், படிக்கட்டு தரையிறங்கிடமும் மாடிமுகப்பும் விறாந்தையும் 0.9 மீற்றர் உயரத்துக்குக் குறையாததும் அத்தகைய படிக்கட்டின் படிக்கட்டு தரையிறங்கிடத்தின் மாடி முகப்பின் அல்லது விறாந்தையின் பக்கத்தின் மீதாக ஒருவர் விழுவதைத் தடுக்கும் பொருத்தமான அமைப்புடைய ஏதேனும் வகையான நிருமாணித்தலையுடையதுமான கைப்பிடி, சிறு தூண்பந்தி அல்லது கைச்சுவரினால் பாதுகாப்பளிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

### ஒளியும் காற்றோட்டமும்

45. (1) கட்டடத்தின் ஒவ்வொரு அறைக்கும் யன்னல்கள், கதவுகள் அல்லது ஏதேனும் வேறு அங்கீகரிக்கப்பட்ட திறப்பிடம் மூலம் இயற்கையான ஒளியும் காற்றோட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்,

(2) ஒளிபெற்றப்படுவதும், காற்றோட்டமுள்ளதுமான கட்டடத்தின் அத்தகைய ஒவ்வொரு அறையும்,

(அ) எந்த வீதியின் அல்லது பொது வீதியின் மீது கட்டடச் சொந்தக்காரருக்கு பாதையுரித்து உண்டோ அவ்வீதியை;

(ஆ) கட்டட அமை நிலையத்தில் அமைந்துள்ள முற்றத்தை அல்லது வெளியிடத்தை, நோக்கித் திறந்திருக்கும் வண்ணம் அமைந்து அதன் மூலமாக இயற்கை வெளிச்சமும் காற்றோட்டமும் பெறப்படக் கூடியதாக யன்னல்களையும் திறப்பிடங்களையும் உடையதாயிருத்தல் வேண்டும்.

46. (1) பண்டகசாலைகளும், தொழிற்சாலைகளும் தவிர்ந்த ஏனைய அறைகளின் விடயத்தில், அத்தகைய வெளிச்சம், காற்றோட்டம் புகுவழிகள் அறையின் எந்த பாகமும் புகுவழியில் சமதளப்பரப்பில் செங்குத்தான நிலையில் அத்தகைய புகுவழியிலிருந்து 10 மீட்டர் தூரத்துக்கப்பால் இருத்தலாகாது. மேலும் அத்தகைய அறையின் எந்தப் பாகமும் புகுவழியின் சமதளப் பரப்பிற்கிணையான நிலையில் புகுவழியின் முனையிலிருந்து 3 மீற்றருக்கு அப்பாலுமிருத்தலாகாது.

(2) பண்டகசாலைகளினதும், தொழிற்சாலைகளினதும் விடயத்தில் அத்தகைய வெளிச்சம், காற்றோட்டம் புகுவழிகள், சமதளப்பரப்பிலிருந்து செங்குத்தான நிலையில் அத்தகைய புகுவழியிலிருந்து 12 மீற்றர் தூரத்துக்கப்பால் இருத்தலாகாது. மேலும் அத்தகைய அறையின் எந்த பாகமும் புகுவழியின் சமதளப்பரப்பிற்கிணையான

திசையில் புகுவழியின் முகப்பிலிருந்து 3 மீற்றருக்கப்பாலுமிருத்தலாகாது.

47. இயற்கை வெளிச்சத்தினதும் காற்றோட்டத்தினதும் மூலங்கள்—

(அ) மாடி முகப்பு, விறாந்தை, வாயில்மாடம் ஒரு வீதியை அல்லது முற்றத்தை அல்லது திறந்த வெளியை நோக்கியிருத்தல் ;

(ஆ) அத்தகைய மூலங்களில் பயன்பெறும் அறையின் ஆகக்கூடிய ஆழமானது, மாடிமுகப்பின் விறாந்தையின் அல்லது வாயில் மாடத்தின் வெளிமுகப்பிலிருந்து 48 ஆம் ஒழுங்கு விதியின்கீழ் குறித்துரைக்கப்படும், அத்தகைய தூரத்தை விஞ்சாதிருத்தல் ;

(இ) மாடி முகப்பின், விறாந்தையின் அல்லது வாயில் மாடத்தின் முகப்பகுதி, தளமட்டத்திற்கும் அத்தகைய மாடி முகப்பின், விறாந்தையின் அல்லது வாயில் மாடத்தின் விதானமட்டத்துக்குமிடையிலான 2/3 பங்கு உயரத்துக்குக் குறையாத வெளிப்பக்கக் காற்றுப்புகுவழியைக் கொண்டிருத்தல்,

மூடப்பட்ட அல்லது பகுதியளவில் மூடப்பட்ட மாடிமுகப்புக்கு விறாந்தைக்கு அல்லது வாயில் மாடத்துக்குச் செல்லலாம்.

48. (1) ஏதேனும் கட்டடத்தின் ஒவ்வொரு அறையின் புகுவழியின் சராசரி இடப்பரப்பு III ஆம் அட்டவணையின் 'எ' படிவத்தில் உள்ள அளவுத்திட்டத்தினை விஞ்சுமிடத்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மூலங்களிலான இயற்கை வெளிச்ச, காற்றோட்ட வழிகளுக்கு ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

(2) நடைபாதையை அல்லது நடைவழியை ஊடறுத்துச் செல்லும் அறையின் உள்ளார்ந்த சுவர்களில் நுழைவாயில்களை ஏற்பாடு செய்வதன்மூலம் நடைபாதைகளும், நடைவழிகளும், வெளிச்சமூட்டவும், காற்றோட்டவும் படலாம். ஆயின் நுழைவாயிலின் இடப்பரப்பு III ஆம் அட்டவணையின் 'எ' படிவத்தில் எடுத்துக் காட்டப்படும் அளவுத்திட்டத்திற்கு இசைவாயிருத்தல் வேண்டும்.

(3) இரண்டுக்கு மேற்பட்ட மோட்டார் வாகனங்களுக்கு மோட்டார் வண்டி நிறுத்தக் கொட்டகையாகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் அறை எதிர்க் காற்றோட்டத்தை அனுமதிப்பதற்காக அறையின் இரண்டு அல்லது மேற்பட்ட பக்கங்களை (இடப்பரப்பின் ஆகக் குறைந்தது 50 சதவீதத்தையாவது) நுழைவாயில்களாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

49. வெளிச்ச காற்றோட்ட தேவைப்பாடுகளை நிர்ணயிக்கும் நோக்கத்துக்காக பொதுச் சுவரின் இடப்பரப்பு அரைவாசி திறந்தும் தடைசெய்யப்படாதுமிருக்குமிடத்து, ஏதேனும் அறை அடுத்துள்ள அறையின் ஒரு பாகமாகக் கணிக்கப்படலாம்.

50. ஒவ்வொரு தட்டுக்களிலுமுள்ள எல்லா முன்பக்க, பின்பக்க, அருகருகுச் சுவர்களில் திறந்த இடம் இல்லாமல் பக்கவாட்டிற்கு 12 மீட்டருக்கு மேலுள்ள கட்டடங்களின் விடயத்தில், நிரந்தர காற்றோட்டமானது பொருத்தமான காற்றோட்ட வசதிகளின்மூலம் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

51. (1) மலசலகூடம், குளியலறை ஆகியவற்றுக்குத் தவிர்ந்த ஒவ்வொரு பள்ளமும் அல்லது வேறு திறந்த இடங்களும் நிலையான தனித்தவொன்று திறந்துவிடப் படல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தளத்திற்கு மேலான முழு இடப்பரப்பும் ஆகாயம் நோக்கி திறந்துவிடப்படல் வேண்டும். அத்துடன் 1 மீட்டருக்கு கூடாத நீளத்திற்கு ஊடுருவும் தடுப்புக்களும், கூரிய தனித்தடுப்புகளும் தவிர்ந்த தடைபெறுவதும் இல்லாதிருத்தலும் வேண்டும் (இவ்வொழுங்குவிதியின் நோக்கத்துக்காக "நிலையான தனித்தளம்" என்பது கட்டடத்தின் வெளிமுகப்பிலிருந்து மேல் நோக்கியும் வெளிநோக்கியும், கார் நிறுத்துவதற்கான அல்லது குளிரூட்டும் சாதனம் ஒன்றுக்கான அல்லது வேறு சேவை எந்திரத்துக்கான அடுத்துள்ள அல்லாத அறையின் மேற்தளமட்டத்தில் இடையாக 63½ பாகை கோணத்தில் மட்டமாக, ஏதேனும் கட்டடத்தின் வெளிச்சுவர் அல்லது வேறு நிருமாணத்தில் சாராமல் வரையப்பட்ட தளம் ஒன்று எனப் பொருளாகும்.) வரையப்பட்ட ஏதேனும் சமதளத்துக்கு மேலாக, அதிகாரமளிக்கப்பட்ட, தடை தவிர்ந்த வேறு ஏதேனும தடையிருக்குமிடத்து, சமதளமானது, அறையின் நிலமட்ட சமதளத்தின் குறுக்கு வெட்டுக்கோட்டிலிருந்தும் தடையின் ஆகக் கடைசிமுனையின் செங்குத்து சமதளம் வரையும் வரையப்படலாம்.

(2) பள்ளம் அல்லது வேறு வாயில் கட்டடத்தின் பக்கத்தில் அல்லது பட்டிக்க முகப்பில் அமைந்துள்ளவிடத்து வெளிப்புறத் திறந்த வெளியானது—

(அ) அத்தகைய முகப்பின் எப்பாகமும் ; அத்தகைய முகப்பிற்கு எதிரான எல்லையிலிருந்து கார் நிறுத்துவதற்கான அல்லது குளிரூட்டும் சாதனத்திற்கான அல்லது வேறு சேவை எந்திரத்திற்கான அடுத்தளம் அல்லாத அதன் மேற்தள மட்டத்தில், இடையாக 63½ பாகை கோணத்தில் திறந்த வெளிக்கூடாக வரையப்பட்ட தொடர்ச்சியான நிலைக் கோடுகள் எதனையும் ஊடறுக்காது அத்தகைய அகலத்தில் இருத்தல் வேண்டும்.

(ஆ) 2.25 மீட்டருக்கும் குறையாதிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) புறநிலையாக கட்டடத்துடன் சேர்ந்திருத்தல் வேண்டும் ; அல்லது பொதுப்பாவனைக்கு விடப்படுதல் வேண்டும்.

(3) கழுவறைகளையும், குளியலறைகளையும் பொருத்தமட்டில், நியம வெளிச்ச சமதளமானது அதிகாரசபையினால் தளர்த்தப்படலாம். ஆயின் தடைசெய்யப்படாததும் ஆகக்குறைந்தது 1 மீட்டர் அகலமுடைய திறந்தவெளி வாயில் ஊடுருவிச் செல்லும் வளவுக்குள் இடைத்தப்படும் வண்ணம் ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

52. நிலவறையில் ஏதேனும் ஓர் அறை அமைந்து அது இயற்கை வெளிச்சமூட்டப்படவும், காற்றோட்டப்படவுமுள்ளவிடத்து அத்தகைய அறை வெளித்தரை மட்டத்திற்கு மேலாகவுள்ள வெளிச்சுவர்களின் உயரத்தில் ஆகக்குறைந்தது மூன்றில் இரண்டையாவது உடையதாயிருத்தல் வேண்டுமென்பதுடன் வெளித்தரை மட்டத்துக்கு மேலாக் தேவைப்படுத்தப்படும் இயற்கை வெளிச்ச, காற்றோட்ட மூலங்களையும் உடையதாயிருத்தல் வேண்டும்.

53. ஒழுங்குவிதி 48 இன் ஏற்பாடுகள், வெளி வெளிச்சமும் காற்றும் புகும் வண்ணம் நேரடி வாயில்களை வைத்திருக்க முடியாத அத்தகைய தன்மையுடைய புகைப்படம் பிடிக்கும் இருண்ட அறை அல்லது குளிரூட்டப்பட்ட பண்டகசாலை அறை போன்ற அறைகளுக்கு ஏற்புடையதாக்கப்படுதலாகாது. ஆனால் அவை அதிகாரசபையின் திருப்திக்கேற்ப செயற்கை முறையில் வெளிச்சமேற்றப்பட்டு, பொறிநுட்ப முறையில் காற்றோட்டப்படுதல் வேண்டும்.

பொறிநுட்பமுறையான காற்றோட்டமும் குளிரூட்டலும்

54. (1) அதிகாரசபை கட்டடத்தின் வகையையும், அளவையும் கணக்கிலெடுக்கும்போது, கட்டடத்துக்கு ஒரு மத்திய குளிரூட்டல் தொகுதி அவசியமென அபிப்பிராயப்படுமிடத்து, இயற்கை வெளிச்சமும் காற்றோட்டமும் தொடர்பானதும், அறைகளின் உயரம் தொடர்பானதுமான இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகள் ; சட்டத்தில் 8ஆ பிரிவின்கீழ் அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்போது அதில் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கிணங்க காற்றோட்ட, வெளிச்ச முறைமைகள் ஆக்கப்பட்டு பேணப்படுவதற்கிணங்க திருப்திபடுத்தப்படலாமென்பதுடன் . அதிகாரசபையினால் குறித்துரைக்கப்படும் அத்தகைய கொள்ளளவைக் கொண்ட ஒரு துணைத்துறை மின் இயக்கி நிறுவப்பட்டு, பொது மின்சார வழங்குகை தடைபடும் சந்தர்ப்பங்களில் இயங்குதலும் வேண்டும்.

(2) பள்ளங்கள் அல்லது ஏனைய நீர் ஒழுக்கிடை வாயில்களும் குளியலறைகளும் தேவைப்படுத்தப்பட்ட அலக்கில் உள்ளார்ந்த அல்லது வெளிச்சார்ந்த திறந்த வெளியின்மீது திறக்கப்பட முடியாதவிடத்து 15 மீட்டர் உயரம் வரையிலான கட்டடங்களின் விடயத்தில் ஏதேனும் ஒரு பக்கப் பரிமாணம் ஆகக் குறைந்தது 1 சதுர மீட்டருக்குக் குறையாததும், 15 மீட்டர் உயரத்துக்கு

மேற்பட்ட கட்டடங்களின் விடயத்தில் ஏதேனும் ஒரு பக்கப் பரிமாணம் ஆகக் குறைந்தது 3 சதுர மீட்டருக்குக் குறையாததுமான அளவில் இருக்க வேண்டிய காற்றோட்ட வீணைக்கோளின்மீது திறக்கப்படலாம். ஆயின் இரண்டுக்கு மேற்பட்ட மாடிகளைக் கொண்ட கட்டடங்களின் விடயத்தில் நீர் ஒதுக்கிடமும் குளியலிடமும், பன்னல் வாயில்களிலும் வீணைக்கோளின் மீது இடப்படும் நேர்தான கொள்ளவுள்ள முழுமையான மின் விசிறிகளினால் பொறிநுட்ப முறையில் காற்றோட்டப்படுதல் வேண்டும்.

(3) பொறிநுட்பமுறைக் காற்றோட்டத்துக்கும், குளிரூட்டப்படுவதற்கும் உட்படும் கட்டடத்தின் சொந்தக்காரர் குளிரூட்டும்போது அல்லது பொறிநுட்ப முறை காற்றோட்ட அல்லது செயற்கை முறையான வெளிச்ச முறைமையை பயன்பாட்டுக்குக்கொண்டு வரும்போது இவ்வொழுங்குவிதிகளின் தொடர்பான ஏற்பாடுகளுடன் முழுமையாக இணங்கியொழுகுவதற்குத் தான் உடன்படுகிறேன என ஒரு உறுதியைக் கொடுத்தல் வேண்டுமென்பதுடன் சொந்தக்காரர் தொடர்பான ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகும்வரை அத்தகைய கட்டடம் குடியிருப்பதற்குப் பொருத்தமற்றதெனக் கருதப்பட வேண்டுமென்பதுடன் தொடர்ந்து குடியிருத்தலும் ஆகாது.

### அத்திவாரங்கள்

55. (1) ஒவ்வொரு கட்டடமும் கட்டடத்திற்கு முழுமையாக அல்லது அதன் ஏதேனும் பாகத்துக்கு அல்லது ஏதேனும் அயற் கட்டடத்திற்கு அல்லது வேலைகட்டு சேதமேற்படுத்தும் அல்லது அதன் ஸ்திரத்தின் மதிப்பைக் குறைக்கும் அல்லது நகரும் வேறு தன்மையினதான அத்தகைய முறையில் கட்டடத்தை பாதுகாப்பாக தாங்கி அதன் கூட்டுச் சுமையையும், விதிக்கப்பட்ட சுமையையும் நிலமட்டத்தில் தாங்கிநிற்கும் வகையில் அத்திவாரங்கள் மூலம் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் கட்டடத்தை தாங்கும் அல்லது தாங்கத் துணைபுரியும் நிலத்தின் எந்த பாகமும், அத்தகைய கட்டடங்களின் குடியிருப்பாளரது பாதுகாப்பை முன்னிட்டு அதிகாரசபையினால் ஏற்றுக்கொள்ளப்படுவது தவிர்ந்த (கட்டடத்தின் ஏதேனும் பாகத்தினால் அல்லது வேறுவகையில் உருவாகினதுஞ்சரி) ஏதேனும் அமுக்கத்துக்குட்படுத்தப்படுதலாகாது.

(3) உத்தேசிக்கப்பட்ட ஏதேனும் கட்டடத்துக்கு அடுத்துள்ள நிலமானது அக்கட்டடத்தின்மீது கட்டடத்தின் ஏதேனும் பகுதி மீது அமுக்கம் ஏற்படுத்துமாயின் அல்லது முறையற்ற சுமையொன்றைத் தோற்றுவிக்குமாயின், அக்கட்டடம் அல்லது அதன் பகுதி அனுமதிக்கப்பட்டதாலவரான விசைகளின் நேர்தான வரையறையின் மிஞ்சாமல் அமுக்கத்தை அல்லது சுமையை பாதுகாப்பாகத் தாங்கி தாக்குப்பிடிக்க இயலுமான வகையில் நிருமாணிக்கப்படுதல் வேண்டும்.

56. ஏதேனும் கட்டடத்தின் அத்திவாரங்கள், எல்லைச்சுவர்கள் அமைவிடத்தின் சொந்தக்காரர்களுடைய பரஸ்பர சம்மதத்துடன் கட்டப்படும் பொதுவான எல்லைச்சுவரின் அத்திவாரத்தின் விடயம் தவிர்ந்த ஏனையவற்றில் கட்டடத்தின் அமைவிடத்தின் எல்லைக்கோடுகளுக்கப்பால் செல்லுதலாகாது.

57. (1) அடுத்துள்ள ஆதனங்களின்மீது சுமைபெறக்கூடிய அல்லது நிலத்தில் அசைவையேற்படுத்தக்கூடிய அல்லது அடுத்துள்ள ஆதனத்தின் கட்டமைப்பின் ஸ்திரத்தன்மையை எவ்விதத்திலும் பாதிக்கும் விளைவுடைய தன்மையினதான மதிகாங்களைப் பூமியில் இறக்கல் பூமியை அகழ்தல் அல்லது இணைகுழாய்கள் போன்றவை தொடர்பான அத்தகைய ஏதேனும் நில ஒப்பரவு வேலை அல்லது அத்திவாரங்கள், அத்தகைய வேலைகள் அமைவிடத்தில் தொடங்கப்படுமுன்னர் தகைமைபெற்ற ஒருவரால் இவ்வொழுங்கு விதிகளின்கீழ் தேவைப்பாடுகள் திட்டத்தையும் வரைவையும் தயாரிக்கும்போது கவனமாக, ஆராயப்படுதல் வேண்டும்.

(2) தகுதிபெற்ற ஆளும், சொந்தக்காரரும் ஏதேனும் அடுத்துள்ள கட்டடத்துக்கு அல்லது ஆதனத்துக்கு எவ்வித சேதமும் ஏற்படாவண்ணம் தமது சொந்தச் செலவில் எல்லா வேளையிலும் தடுக்கப் பொறுப்புள்ளவர்களாதல் வேண்டும்.

(3) அத்திவார அகழ்வும் தற்காலிகமான வேலைகளும் உள்ளிட்ட முழு நிருமாண அமைவிடமும் அதிகாரசபையினால் தேவைப்படுத்தப்படக்கூடியதான பொருத்தமான வேலியினால் அல்லது அடைப்பினால் ஏதேனும் அடுத்துள்ள வீதியிலிருந்து அல்லது ஆதனத்திலிருந்து பிரிக்கப்படுதல் வேண்டும்.

### இயக்கேணிகள்

58. ஏதேனும் கட்டடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பிரயாணிகளதும் பொருட்களதும் இயக்கேணிகளது எண்ணிக்கையும் அவற்றின் வடிவமும், அமைப்பும் நிறுவுதலும், பரிசீப்பும் பரிசோதனையும், இயக்கமும், இவ்வொழுங்குவிதிகளின் III ஆம் அட்டவணையின் 'ஏ' படிவத்தில் குறித்துரைக்கப்படும் அத்தகைய தேவைப்பாடுகளுடன் இசைவானவையாயிருத்தல் வேண்டும்.

### நீர்வழங்குகையும் கழிகான்களும்

59. (1) ஒவ்வொரு கட்டடமும் ஏற்கனவேயுள்ள பொது முறைமையுடன் இணைந்த முறைமையிலான பாதுகாக்கப்பட்ட நீர் வழங்குகைக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(2) பொது நீர் வழங்குகை முறைமையுடன் இணைந்த முறைமை ஏற்பாடு செய்யப்பட முடியாதவிடத்து, தனிப்பட்ட சேவையுடன் இணைந்த முறைமை ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

(3) இடப்பரப்பின் வேறு காணி அடையாளங்களையும் கட்டடத்தின் அமைவையும் கருத்திற்கொண்டு நீர் வழங்குகை தொடர்ந்திடங்காது என அதிகாரசபை மேற்பாடுமாயின் ஒவ்வொரு கட்டடமும், அதன் ஒவ்வொரு விடயத்தில் குறித்துரைக்கப்படும் அத்தகைய கொள்ளளவிலான நீர்த்தாங்கும் தாங்கிகளுக்கு அல்லது இயந்திரங்களுக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும். குடிநீர் வழங்குகைக்குப் பயன்படுத்தப்படும் எந்த கிணறும் ஒரு வடிகுட்டைக்கு அல்லது கழிவுநீர் தாங்கு குழிக்கு 15.0 மீட்டர் அண்மித்து இருத்தலாகாது.

60. (1) ஒவ்வொரு வதிப்பிடமனைப் பிரிவும் ஆகக்குறைந்தது ஒரு நீர் ஒதுக்கிடத்தையும், வேறு வகையான ஒவ்வொரு கட்டடமும் போதியளவு எண்ணிக்கையிலானதான நீர் ஒதுக்கிடங்களையும் சிறுநீர் கழிவிடங்களையும், கைத்தொட்டிகளையும் அத்துடன் ஏனைய ஆரோக்கிய வசதிகளையும் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

ஆயின் IV ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்படும் கட்டடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நீர் ஒதுக்கிடங்களதும் சிறுநீர் கழிவிடங்களதும் கைத்தொட்டிகளதும் அத்துடன் ஏனைய ஆரோக்கிய வசதிகளதும் எண்ணிக்கை அவ்வட்டவணையில் உள்ள அளவுத் திட்டங்களுடன் இசைவானவையாயிருத்தல் வேண்டும்.

(2) எல்லா கழிகான்களும், கழிகான் வெளி வழிகளும் ஏற்கனவே உள்ள பொது கழிகான் முறைமையுடன் இணைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அதிகாரசபையானது, குறிப்பிட்ட ஏதேனும் விடயத்தில் கழிகான்களும், கழிநீரும் பொது கழிகான் முறைமையுடன் இணைக்கப்படுமுன் அவற்றை சுத்தப்படுத்துவதான நியமங்களுக்கு கொணரவென முற்சுத்திகரிக்கப்பட வேண்டுமென தேவைப்படுத்தலாம்.

(3) (அ) ஒரு பொது கழிவுகான் முறைமை இல்லாதவிடத்து, அல்லது வெளி கழிகள் பொது கழிகான் முறைமையுடன் இணைக்கப்பட முடியாதென அதிகாரசபை கருதும் வேறுவிடங்களில் கழிவுநீர் தாங்கியின் மூலம் [illegible] வேண்டும்.

(ஆ) மழைநீர், கழிவுநீர் தாங்குகுழி மூலம் பொருத்தமாக வெளியேற்றப்படுதல் வேண்டும்.

### வடிகால்

61. ஒவ்வொரு கட்டிடமும், சுவர்களுக்கு அல்லது கட்டிடத்தின் அத்திவாரத்துக்கு அல்லது அடுத்துள்ள கட்டிடங்களுக்கு சேதமேற்படுத்தாமலும் ஈரப்படுத்தாமலும் கூரையிலிருந்து வழியும் நீரை வீதியின் வாறுக்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட வேறு வெளி வழிக்குப் போகும் வண்ணம் வடியக்கூடிய போதியளவு வடிகால் வசதியையும் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

### கழிவு அகற்றல்

62. ஏதேனும் மனையினுள் உருவாகும் கழிவுகள், அதன் குடியிருப்பாளர்களது சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கு அவசியமானதென அதிகாரசபை கருதும் அத்தகைய விதத்தில் சேகரிக்கப்பட்டு வெளியேற்றப்படுதல் வேண்டும்.

### மின்சார, குழாய் வேலைகள்

63. ஏதேனும் கட்டிடத்தின் அல்லது மனையின் எல்லா மின்சார குழாய் வேலைகளும் விடயத்துக்கேற்றபடி பதிவு செய்யப்பட்ட ஒரு மின்சார விஞ்ஞானியினால் அல்லது உத்தரவு பெற்ற குழாய் வேலையாளராலும் கொண்டு நடாத்தப்பட வேண்டுமென்பதுடன், இவ்வேலைகள், அத்தகைய ஏதேனும் கட்டிடத்தினுள் அல்லது மனையினுள் ஆகக்கூடுதலான பாதுகாப்பையும் ஆரோக்கியத்தையும் உத்தரவாதமளிக்கும் பொருட்டு அதிகாரசபை தேவைப்படுத்தும் அத்தகைய நியமத்திற்கும் அளவுத்திட்டங்களுக்கும் இசைவானவையாயிருத்தலும் வேண்டும்.

### தீ பாதுகாப்பு

64. ஒவ்வொரு கட்டிடமும், அத்தகைய கட்டிடங்களின் குடியிருப்பாளர்களுக்கும் பெருமளவில் பாதுகாப்பை ஏற்பாடு செய்யும் பொருட்டு அதிகாரசபையினால் குறித்துரைக்கப்படக்கூடிய ஆவது இடப்பரப்புக்கு ஏற்புடையதாக்கப்படும் தீ பாதுகாப்பு தேவைப்பாடுகளுடன் இசைவானவையாயிருத்தல் வேண்டும்.

65. நானூறு சதுர மீற்றர் அளவுக்கு மேற்பட்ட எல்லா உயர எழுச்சிக் கட்டிடங்களும், பொதுக்கூட்டக் கட்டிடங்களும், தொழிற்சாலைகளும், வைத்தியசாலைகளும், அவற்றின் நிறுவுகையும் தீயணைக்கும் படையின் பிரதான அலுவலரினால் தேவைப்படுத்தப்படக்கூடிய அத்தகைய மேலதிகத் தீ பாதுகாப்பு தேவைப்பாடுகளுடனும் இசைவானவையாயிருத்தல் வேண்டும்.

66. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாடிகளையுடையதும் 240 சதுர மீற்றர் அளவினதானதும் குழாய் மூலமான தண்ணீர் வழங்குகை பெறப்படக்கூடியதுமான இடப்பரப்பில் அமைந்துள்ள வகையுமான எல்லாக் கட்டிடங்களும், தீப்பற்றும் சந்தர்ப்பத்தில் பயன்படுத்தப்படக்கூடியவிதமாக நீரைச் சேகரித்து வைப்பதற்காக நீர்த்தொட்டியொன்றுக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும். நீர்த்தொட்டியின் பரிமாணம், திட்டமிடல் அதிகாரசபையினால் கட்டிடத்தின் அளவுக்கும், பயனுக்குமேற்ப தீர்மானிக்கப்படும்.

### இசைவுச் சான்றிதழ்

67. சட்டத்தின் 8ஆ பிரிவின் கீழான இசைவுச் சான்றிதழுக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் I ஆம் அட்டவணையில் எடுத்துக்காட்டப்பட்ட 'ஈ' படிவத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன், பின்வருவனவற்றை இணைத்தல் வேண்டும்.

(அ) சாலி அபிவிருத்தியின் அல்லது காணி உப பிரிவிடுகையின் விடயத்தில்—

(i) உப பிரிவிடுகை அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கும் அனுமதிப் பத்திரத்துக்குமிணங்க கொண்டு நடாத்தப்பட்டுள்ளதென்று குறிப்பிடும் நகரத்திட்டமிடலாளரால் அல்லது உத்தரவுபெற்ற அளவையாளரால் கொடுக்கப்படும் ஒரு சான்றிதழ் ;

(ii) அபிவிருத்திச் சொற்பாடு வீதி நிர்மாணித்தல், மதகு அல்லது வேறு பொறியியல் வேலை சம்பந்தமானதாயிருக்குமிடத்து, அபிவிருத்தி வேலைகள் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கும், அளவுத் திட்டங்களுக்கும், அனுமதிப்பத்திரத்துக்கும் இணங்க, தனது மேற்பார்வையின் கீழ் செய்யப்பட்டது என்று எடுத்துக் கூறும் ஒரு வரைவுபெற்ற அல்லது பதிவு செய்யப்பட்ட சிவில் பொறியியலாளரால் அல்லது அரசாங்கத்தின் கீழ் வேலைக்குப் பொறியியலாளராக அங்கீகரிக்கப்படக்கூடியதான தகைமைகளையுடைய ஓர் ஆளினால் கொடுக்கப்படும் சான்றிதழ்.

(ஆ) எட்டாம் ஒழுங்குவிதியின் 'அ' வகுதியினுள் வரும் கட்டிடங்களின் நிர்மாணித்தலின் விடயத்தில்—

(i) அபிவிருத்தி, அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கும் அனுமதிப் பத்திரங்களுக்கும் இணங்க அவரது மேற்பார்வையின் கீழும் செய்யப்பட்டுள்ளது என்று எடுத்துக்கூறும் பதிவு செய்யப்பட்ட அல்லது வரைவுபெற்ற கட்டிடக் கலைஞரால் அல்லது கட்டிடக் கலைஞராகத் தொழில்பெற அரசாங்கத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளையுடைய ஓர் ஆளினால் கொடுக்கப்படும் சான்றிதழ்.

(ii) அத்திவாரங்களும், நிலமிசைக் கட்டமைப்பும் அத்துடன் மற்றைய வேலைகளும், 9 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட வடிவமைப்புக்கிணங்கவும், அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கும், அனுமதிப்பத்திரத்துக்கிணங்கவும் தனது மேற்பார்வையின் கீழும் செய்யப்பட்டுள்ளது என்றும் கட்டிடக் கட்டமைப்பில் பாதுகாப்பானதென்றும் எடுத்துக் கூறும் வரைவுபெற்ற அல்லது பதிவு செய்யப்பட்ட சிவில் பொறியியலாளரால் அல்லது அரசாங்கத்தின் கீழ் பொறியியலாளராகத் தொழில் பெறுவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள தகைமைகளையுடையவரான ஓர் ஆளினால் கொடுக்கப்படும் சான்றிதழ் அத்துடன்

(iii) மின்சார, சுகாதார, குளிரூட்டல் முறைமைகளும் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கும், அளவுத் திட்டங்களுக்குமிணங்க இருக்கின்றன, நிறுவப்பட்டுள்ளன என்பதுடன் அவை எல்லா பாதுகாப்புத் தேவைகளையும் திருப்திப்படுத்துகின்றன எனவும் அவை தனது மேற்பார்வையின் கீழ் நிறுவப்பட்டுள்ளன எனவும் எடுத்துக்கூறுவதான தகைமை பெற்ற ஒரு மின்னெந்திரவியல் பொறியியலாளரினால், சுகாதார அல்லது வரைவுபெற்ற சிவில் பொறியியலாளரினால், தகைமை பெற்ற குளிர்ச்சி செய்யும் பொறியியலாளர் அல்லது மின்சார, சுகாதார, சிவில் அல்லது குளிர்ச்சி செய்யும் பொறியியலாளர் தொழிலுக்காக அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளையுடைய ஓர் ஆளினால் கொடுக்கப்படும் சான்றிதழ்.

(இ) 8 ஆம் ஒழுங்குவிதியின் 'ஆ' வகுதியினுள் வரும் கட்டிடங்களின் நிர்மாணித்தல் விடயத்தில், வேலைகள் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திற்கும், அனுமதிப் பத்திரத்துக்கும் இணங்கவும், தனது மேற்பார்வையின் கீழ் செய்யப்பட்டுள்ளன எனவும் கட்டிடம் கட்டமைப்புப் பாதுகாப்பானது எனவும், பயனுடையதும், பதிவு செய்யப்பட்ட அல்லது வரைவுபெற்ற கட்டிடக்கலைஞரினால் அல்லது சிவில் பொறியியலாளரினால் அல்லது அரசாங்கத்தினால் ஒரு கட்டிடக் கலைஞராக அல்லது பொறியியலாளராகத் தொழில் பெறுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளையுடைய ஓர் ஆளினால் கொடுக்கப்படும் சான்றிதழ்.

(ஈ) 8 ஆம் ஒழுங்குவிதியின் 'இ' வகுதிக்குள் வரும் கட்டிடங்களின் நிர்மாணித்தல் விடயத்தில், வேலைகள் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கும் அனுமதிப்பத்திரங்களுக்குமிணங்கவும், தனது மேற்பார்வையின் கீழும் செய்யப்பட்டுள்ளது எனவும் அத்துடன் கட்டிடத்தின் கட்டமைப்புப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் எல்லா முன்பாதுகாப்புகளும் எடுக்கப்பட்டுள்ளன எனவும் பயனுடையதான

கட்டடத்தைக் கட்டுபவரினால் அல்லது கட்டுபவர் சொத்தக்காரராயிருக்குமிடத்து சொத்தக்காரரினால் கொடுக்கப்படும் ஒரு சான்றிதழ்.

68. அதிகாரசபை அல்லது அதன் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி அல்லது பிரதிநிதிகள், குடியிருப்புக்கான இசைவுச் சான்றிதழ் வழங்கப்படுமுன்னர் அல்லது அபிவிருத்தியின் ஏதேனும் கட்டத்தில், இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்பட்டுள்ளனவா என்பதைத் தீர்மானிப்பதற்காக, எல்லா நியாயமான நேரங்களிலும் ஏதேனும் கட்டிடத்துட் பிரவேசித்து, பரிசோதனை செய்யலாம்.

## பாதுகாப்பற்ற கட்டிடங்கள்

69. அதிகாரசபை, கட்டிடம் கட்டிடத் திணைக்களப் பணிப்பாளரால் பாதுகாப்பற்றது என உறுதிப்படுத்தப்படுமிடத்து, அதன் குடியிருப்பற்றது என உறுதிப்படுத்தப்படுமிடத்து, அதன் குடியிருப்பாளருக்கு அல்லது பொதுப் பாதுகாப்புக்கு அபாயம் விளைவிக்கக்கூடியதான ஏதேனும் கட்டிடத்தின் சொத்தக்காரரை அதைத் திருத்தும்படி அல்லது நிர்மூலமாக்கும்படி அல்லது அபாயத்தை வேறு வகையில் அகற்றும்படி பணிக்கலாம்.

## பொருள் விளக்கங்கள்

70. இவ்வொழுங்குவிதிகளில்

'இருப்பிடக் கூறுகள்' என்பது, 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தில் வரைவிலக்கணஞ் செய்யப்பட்ட பிரிவு எனப் பொருள்படும்;

'அணுகுவழி' கட்டிடங்களுக்கு அல்லது காணியில் வேறு வழிகளுக்கு (அதன்மீது பொதுமக்களுக்கு வழியுரிமை இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலுஞ்சரி) அணுகுவழியாகப் பயன்படும் ஏதேனும் வீதியையும் உள்ளடக்கும்;

'அதிகாரசபை' என்பது, 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தினால் உருவாக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபை எனப் பொருள்படும்;

'அடித்தளம்' என்பது, முழுமையாக நிலமட்டத்துக்குக் கீழான அல்லது அடுத்துள்ள நிலமட்ட உயரத்திலிருந்து 2/3 அளவினதான மேற்றளைக்குக் கீழான தளத்தின் ஒரு பாகம் எனப் பொருள்படும்;

'உயரெழுச்சிக் கட்டிடம்' என்பது, மேற்றளை அல்லது 15.0 மீட்டர் தரைமட்டத்துக்கு மேலான உயரத்தை அதன் ஏதேனும் பாகம் விஞ்சும் கட்டிடம் உள்ளிட்ட நான்கு மாடிகள் உள்ள, ஆனால் 56 சதுரமீட்டரை விஞ்சாத அளவுடைய மோட்டார் அறையை அல்லது இயந்திர அறையை அல்லது 3.0 மீட்டர் உயரத்தையும் 25 சதுரமீட்டர் அளவையும் விஞ்சாத மாடிப்படிகள் அத்துடன் 1.5 மீட்டர் உயரத்தை விஞ்சாத நீர்த் தாங்கி தவிர்ந்த கட்டிடம் எனப் பொருள்படும்.

'வதிப்பிடக் கட்டிடம்' என்பது, புறநீங்கலாக ஒரு வதிப்பிட மனைப் பிரிவை அல்லது ஒரு எண்ணிக்கையான வதிப்பிட மனைப்பிரிவுகளைக் கொண்ட கட்டிடம் எனப் பொருள்படும்;

'கட்டிடக் கோடு' என்பது, கட்டிடம் நீடிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்படும் கோடு எனப் பொருள்படும்;

'கட்டிட வேலைகள்' என்பது, ஒரு கட்டிடத்தைக் கட்டுதலை அல்லது மீளக் கட்டுதலை உள்ளடக்கும் அல்லது ஏற்கனவேயுள்ள கட்டிடத்துக்குச் சேர்ப்புக்களை அல்லது திருத்தங்களைச் செய்தல்;

'தவிசாளர்' என்பது, அதிகாரசபையின் தவிசாளர் எனப் பொருள்படும்;

'வதிப்பிட மனை' அல்லது 'வதிப்பிட மனைப் பிரிவு' என்பது, தனிப்பட்ட படுக்கை, சமையல், சுகாதார வசதிகளையுடைய தனி வதிப்பிடப் பிரிவொன்றாக இயங்கும் ஒரு கட்டிடம் அல்லது ஓர் அறையை அல்லது அறைகள் நிரைபொன்றைக் கொண்ட கட்டிடத்தின் ஒரு பாகம் எனப்படும்;

அபிவிருத்திச் செயற்பாடு' சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும். 'ஏற்கனவே உள்ள காணித்துண்டு' என்பது சட்டம் நடைமுறைக்கு வருமுன்னர் உளதாயிருந்த ஒரு காணித்துண்டு எனப் பொருள்படும்.

'தொழிற்சாலை' என்பது, ஏதேனும் பொருளை உற்பத்தி செய்ய அல்லது தயாரிக்க அல்லது பழுதுபார்க்க எனப் பயன்படுத்தப்படும் கட்டிடம் ஒன்றை அல்லது கட்டிடம் ஒன்றின் பகுதியை உள்ளடக்கும்;

'தொடர்மாடி' என்பது, 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தில் வரைவிலக்கணஞ் செய்யப்பட்ட பிரிவு என்று பொருள்படும்;

நிலப்பரப்பு' என்பது, வெளிப்புறச் சுவர்களின் வெளிமுகப்புகளிலிருந்து அல்லது இரு கட்டிடங்களைப் பிரிக்கும் பொதுச் சுவர் ஒன்றின் விடயத்தில் அத்தகைய பொதுச் சுவரின் மத்திய கோட்டிலிருந்து அளக்கப்பட்டதான கட்டிடம் ஒன்றின் தளத்தின் இடையான நிலப்பரப்பு எனப் பொருளாகும் என்பதுடன் அகலத்தில் ... மீட்டரை விஞ்சும் கரை வெளிமுனைப்புக்களையும், மேல்நிலை மாடிகளையும் அத்துடன் கரை உடையதும் மூடக்கூடியதுமான எல்லா இடப்பரப்புக்களையும் உள்ளடக்குதலும் வேண்டும்;

'கூட்டு நிலப்பரப்பு' என்பது, கட்டிடத்தின் ஒவ்வொரு மாடியிலும் உள்ள மொத்த நிலப்பரப்பு எனப் பொருள்படும்;

'நிலப்பரப்பு விகிதம்' என்பது, ஒரு காணித்துண்டின் மீது அத்தகைய காணித்துண்டின் பரப்பினால் பிரிக்கப்பட்ட எல்லாக் கட்டிடங்களின் மொத்த நிலப்பரப்பாகும்.

'நில இடம்' என்பது, அடைக்கப்பட்ட சுவர்களின் உட்புற முகப்பிலிருந்து அளவிடப்பட்ட ஒரு கட்டிடத்தின் அறையின் அல்லது இடத்தின் செவ்வகத்தான இடப்பரப்பாகும்;

'வீடமைப்புத் தொகுதி' என்பது, ஓர் அமைவிலமைந்திருக்கும், நிரந்தரப் பொது அனுபவிப்பையுடையதுமான வதிப்பிட மனைப் பிரிவுகளின் நிரைபென்பதுடன், தொடர்மாடித் துண்டங்களையும் உள்ளடக்கும்;

'கைத்தொழில் கட்டிடம்' தொழிற்சாலைகள், வேலைத்தளங்கள், பண்டகசாலைகளை உள்ளடக்கும்;

'சட்டம்' என்பது, 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம் எனப்படும்;

'உள்ளூர் அதிகாரசபை' சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்;

'காணித்துண்டு'—காணியின் தொடர்பில், காணி ஒரு தனிச் சொத்தக்காரருக்கு அல்லது கூட்டுச் சொத்தக்காரர் குழுவொன்றுக்கு உரித்தானதாயிருக்குமிடத்து, எல்லை அடையாளங்களினால் அல்லது எல்லைச் சுவர்களுக்கால் அடைக்கப்படுவதனால் அல்லது வேலியடைக்கப்படுவதனால் எல்லை நிர்ணயஞ்செய்யப்பட்டதும் ஒரு காணித்துண்டாக உள்ளூரதிகாரசபையினால் அல்லது சபையினால் அங்கீகரிக்கப்பட்டதுமான ஏதேனும் முழுக் காணியுமாகும்;

'சொத்தக்காரர்' என்பது எந்த வகைத் தொடர்பில் வேலை செய்யப்படுகிறதோ அவ்வாணியின் வாடகையைத் தன் சொந்தக் கணக்கில் அல்லது வேறு எவரேனும் ஒருவரின் முகவராக அல்லது தம்பிக்கைப்பொறுப்பாளராக அல்லது அவ்வாறு ஒரு வாடகைக் குடியிருப்பாளருக்குக் கொடுக்கப்படின், அத்தகைய வாடகையை அப்போதைக்குப் பெறும் ஒருவரையும் உள்ளடக்கும்.

'பொதுக்கூட்ட இடம்' என்பது, ஒரு படமாளிகை, இசைமக் கொட்டகை, பொதுமண்டபம், நாடக அரங்கு, விரிவுரை அறை அல்லது களியாட்டமன்ற அல்லது ஒத்த நோக்கங்கள் போன்றவற்றுக்காகச் செய்மறை அல்லது இசைவயர்களில் பாவிக்கப்படும் ஓர் இடம் அல்லது கட்டிடம் என்பதுடன் ஒரு பொதுக் கட்டிடத்தையும் உள்ளடக்கும்.

'திட்டமிடல் குழு' என்பது சட்டத்தின் 8ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குழு என்று பொருளாகும்;

'பொதுக் கட்டிடம்' என்பது பொது வழிபாட்டு, நெறியுரை, பொழுதுபோக்கு அல்லது கூட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் கட்டிடத்தையும் மருத்துவ நிறுவகத்தையும் அல்லது மருத்துவசாலையையும் உள்ளடக்கும்;

'பொது வீதி' என்பது எந்த வீதியின்மீது பொதுமக்களுக்குப் பாதையுரித்து உள்ளதும், ஏதேனும் சட்டத்தின்கீழ் அல்லது ஏதேனும் சட்ட நடைமுறையினால், ஏதேனும் அதிகாரசபைக்குரித்தாக்கப்பட்டுள்ளதுமான ஏதேனும் வீதி எனப் பொருள்படுமென்பதுடன், அதனுடன் சேர்ந்துள்ள கான் அல்லது நடைப்பாதையையும் உள்ளடக்கும்;

'தகைமை பெற்றவர்' என்பது அபிவிருத்திச் செயற்பாடு தொடர்பில்—

(அ) கட்டிட வேலை எதுவும் சம்பந்தப்படாதவிடத்து அல்லது 0.5 எக்டேயர் விஞ்சும் அளவிடம் அல்லது துணைப்பிரிவு சம்பந்தமான வேலை எதுவும் சம்பந்தப்படாதவிடத்து பதிவுபெற்ற அல்லது பட்டயம்பெற்ற நகரத் திட்டமிடுநர் ஒருவர் எனவும் 0.5 எக்டேயர் விஞ்சாத அமைவிடம் அல்லது துணைப்பிரிவு சம்பந்தமான வேலை சம்பந்தப்பட்டவிடத்து பதிவுபெற்ற அல்லது பட்டயம்பெற்ற நகரத் திட்டமிடுநர் அல்லது உரிமம்பெற்ற நில அளவையாளரும் மட்டும் பார்ப்பவரும் எனவும் பொருள்படும்.

(ஆ) கட்டிட வகுதிகள் அ, ஆ வைப் பொறுத்தமட்டில், பதிவுசெய்யப்பட்ட அல்லது வரைவுபெற்ற கட்டிடக் கலைஞர் அல்லது பொறியியலாளர் அல்லது அரசாங்கத்தின்கீழ் கட்டிடக் கலைஞராக அல்லது பொறியியலாளராகத் தொழில் பெறுவதற்கு அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளையுடைய ஒருவராவர். அத்துடன்

(இ) கட்டிட வகுதி 'இ' யைப் பொறுத்தவரையில் அதிகாரசபை ஏற்றுக்கொள்ளும் எவரேனும் ஒருவராவர்.

'வீதி' என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வதிப்பிடமனைகளின் அல்லது அமைதியமைத்தின் அணுகுவழியாகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப்பட உத்தேசிக்கப்படும் ஏதேனும் பாதை, நடைவழி அல்லது நடைப்பாதை (அத்தகைய வீதியின்மீது பொதுமக்களுக்கு பாதையுரித்து இருந்தாலும் இல்லாவிட்டாலுஞ்சரி) என்பதுடன், எல்லாக் கால்வாய்களையும், வடிகால்களையும் அகழிகளையும், பக்க நடைப்பாதைகளையும் அத்துடன் அதன் பக்கத்தில் ஒதுக்கிடுகளையும் உள்ளடக்கும்.

'வீதிக்கோடு' என்பது ஏற்கனவேயுள்ள வீதியின் எதிர்கால அளவை அல்லது எதிர்கால அளவைக்காட்ட அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படுவதும் அவ்வீதியின் ஒரு புறத்தில் அல்லது இருபுறங்களிலும் எல்லையிடப்பட்ட கோடு அல்லது கோடுகள் எனப் பொருள்படும்.

'பண்டகசாலை' என்பது வியாபாரத்துக்கான அல்லது வர்த்தகத்துக்கான பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்காகப் பிரதானமாகப் பாவிக்கப்படும் ஒரு கட்டிடத்தை அல்லது ஒரு கட்டிடத்தின் பகுதியை உள்ளடக்கும்.

அட்டவணை I

(ஒழுங்குவிதி 3)

படிவம் "அ"

காணியின் உபபிரிவிடுகைக்காக அபிவிருத்தி அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பம்

அலுவலக உபயோகத்துக்கு மட்டும்.

இல.————

செலுத்தப்பட்ட செயல்முறைக் கட்டணம் ரூ.————

பற்றுச்சீட்டு இல. :————

தேதி :————

தவிசாளருக்கு,
நகர அபிவிருத்தி அதிகாரசபை,
மூலம்

மேயர் / தவிசாளர் / அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்,
————————மாநகரசபை
————————நகரசபை
————————அபிவிருத்திச்சபை உபபிரிவு.

ஐயா,

———— பட்டினத்துல ———— தொகுதியில் ———— வீதியில் ———— ஆம் இலக்க மிடப்பட்ட எனது / எங்கள் காணியை உபபிரிவிடுகை செய்வதற்காக நான் / நாங்கள் இத்தால் விண்ணப்பிக்கிறோம்.

மூப்பிரதிகளில் உள்ளதும் என்னாலும் / எங்களாலும் தகைமை பெற்ற ஒருவராலும் முறையாகக் கையொப்பமிடப்பட்ட பின்வரும் விபரங்களை நான் / நாங்கள் இத்துடன் சமர்ப்பிக்கிறேன் / சமர்ப்பிக்கிறோம்.

1. 1 : 4000 அளவுக்குக் குறையாததும் அடுத்துள்ள சூழங்கள் வீதிகள் தொடர்பிலான காணியை / அமைதியிடத்தின் இடப்பரப்பைக் காட்டுவதுமான ஒரு வரைபடம் (விடயப்பொருளில் உள்ளதுடன் விண்ணப்பகாரருக்குச் சொந்தமானதுள்ள வேறு ஏதேனும் அடுத்துள்ள அமைதியிடங்களையும் தெளிவாகக் காட்டுதல் வேண்டும்.)

2. 1 : 1000 [illegible] குறையாத அளவுடையதான / அமைதியிடத்தின் / காணியின் திட்ட[illegible] திட்டம்.

(i) ஏதேனும் [illegible]தான கட்டிடங்களின் எல்லை பயன்பாடுகளை உள்ள[illegible] அமைதியிடத்தின் இடவமைவு ;

(ii) திட்ட[illegible] வாயுகள், [illegible] அதனுடன் [illegible] காணி ; துண்டுகளின் அல்லது கட்டிடங்களின் பதிப்பீடு இலக்கங்கள் ;

(iii) அமைதியிடத்தின் அணுகுவழி முறைகள் ;

(iV) [illegible] உள்ள வடிகால்களும், நீர்வழிகளும் ;

(V) [illegible] [illegible] அதனை [illegible] ;

(Vi) [illegible] உள்ளடக்கிய சேவை வழிகள் ;

(Vii) மரங்களும், [illegible].

3. [illegible] காணியின் உபபிரிவிடுகையை [illegible] பரிமாணங்கள், [illegible], இடங்கள் அதனுடன் [illegible] எல்லை வீதி [illegible] அமைவுகளை [illegible] வேண்டிய [illegible] 1 : 1000 அளவுக்குக் குறையாத [illegible] கொண்ட [illegible] காட்டும் [illegible].

4. [illegible] வீதியின் [illegible] உறுதிசெய்யப்பட்ட வீதியின் [illegible].

5. இணைப்பில் விபரமாகக் குறிப்பிடப்படும் விபரங்கள்.

மேலே சொல்லப்பட்ட விபரங்கள் உண்மையானவையெனவும், சரியானவையெனவும் நான்/நாங்கள் உறுதிப்படுத்துகின்றேன்/உறுதிப் படுத்துகிறோம்.

அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெறப்படும்வரை நான்/நாங்கள் ஏதேனும் அபிவிருத்தி செயற்பாட்டைத் தொடங்கமாட்டோம் என உடன்படுகிறோம்.

———

உடைமை பெறுநரின் கையொப்பம்

———

சொந்தக்காரரின் கையொப்பம்.

தேதி :———

படிவம் " அ "– இணைப்பு

(தடித்த எழுத்துக்களில் அச்சிடுக)

1. சொந்தக்காரரின் விபரங்கள்

பெயர் :———.

முகவரி :———.

தொலைபேசி :———.

2. (அ) ஏற்கனவேயுள்ள அபிவிருத்தியின் விபரங்கள்

இடஅமைவு :———.

மதிப்பீட்டு இல. :———.

உள்ளூராட்சி சபை :———.

தொகுதி :———.

வீதி :———.

காணித்துண்டு/நில அளவைத் திட்டம் :———.

(ஆ) தற்போதைய பயன்

காணி :

அளவு (சதுர மீட்டர்கள்) :———.

பயன்

கட்டிடங்கள் (விரிவுபடுத்துக) :———.

3. (அ) அமைவிட அபிவிருத்தி—அமைவிடம் நிரப்பப்பட்டு உயர்த்தப்பட உத்தேசிக்கப்படுகின்றதா எனவும், அவ்வாறாயின், உத்தேசிக்கப்பட்டுள்ள தெருக்கள், வடிகால்கள் தொடர்பான மட்ட விபரிப்புகளையும் குறிப்பிடுக. தயவுசெய்து (ஏற்புடையதானால்) இவ்வகைச் சீர்படுத்தல் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் இசைவு பெறப்பட்டுள்ளதா என்பதையும் குறிப்பிடுக.

(ஆ) வாழ்வசதிகளும், வசதிகளும் விபரிப்புகளை.

(இ) உத்தேசிக்கப்பட்ட காணியின் பயன்.

வதிவிடம் :———.

வர்த்தகம் :———.

கைத்தொழில் :———.

நிறுவகமானது :———.

திறந்த வெளிகள், பூங்காவனம், விளையாட்டு மைதானங்கள் : ———.

வீதிகளும், அணுகுவழிகளும் :———.

வேறு ஏதேனும் பாவனை :———.

(ஈ) உள்ளமைப்பு

(i) பெறப்படுந்தன்மை.

நீர் :———.

கழிவோடு :———.

வடிகால் :———.

மின்சாரம் :———.

(ii) மேற்கூறப்பட்ட வசதிகள் பெறப்பட முடியாதவிடத்து அல்லது போதியதாக இல்லாதவிடத்து உத்தேசிக்கப்படும் ஒழுங்கு முறைகள்.

நீர் வழங்குகை :———.

கழிவான் :———.

வடிகால் :———.

மின்சாரம் :———.

4. நிலத்தோற்றம்.—அமைவிடத் திட்டத்தில் எடுத்துக்கூறப்படும் மரங்களின் இடஅமைவு.

5. உயரவெல்லை, கட்டிட உயரவெல்லையாக இருக்குமிடத்து, கட்டிடத்தின் ஒவ்வொரு பாகமும் திட்டமிடல், கட்டிட ஒழுங்குவிதிகளுடன் இயைபானவையாயுள்ளனவென்பதையும் எடுத்துக்கூறுக.

6. எதிர்பார்த்தான தொடக்கமும் தேதியும், கட்டமும்.—

மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் உண்மையானவையெனவும், சரியானவையெனவும் நான்/நாங்கள் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்/உறுதிப் படுத்துகிறோம்.

———

உடைமை பெறுநரின் கையொப்பம்.

———.

சொந்தக்காரரின் கையொப்பம்.

முகவரி :———.

தொலைபேசி :———.

தேதி :———.

அட்டவணை 1

(ஒழுங்குவிதி 3)

படிவம் " ஆ "

காணியின் உபபிரிவினை தவிர்ந்த கட்டிடத்துக்கான, அல்லது காணியினதும் கட்டிடத்தினதும் மாற்றுப் பயனுக்கான அபிவிருத்திக்கான வேறு ஏதேனும் அபிவிருத்திக்கான அபிவிருத்தி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பம்.

அலுவலக உபயோகத்துக்கு மட்டும்

---

இல.:———.
செலுத்தப்பட்ட செயற்பாட்டுக் கட்டணம் ரூ ———.
பற்றுச்சீட்டு இல.:———.
தேதி :———.

---

நகரசபை அபிவிருத்தி அதிகாரசபை தவிசாளருக்கு,

மாநகரசபை முதல்வர்/தவிசாளர்/அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஊடாக,

——————மாநகரசபை

——————நகரசபை

——————அபிவிருத்திச்சபையின் உபபிரிவு.

ஐயா,

பின்வரும் அபிவிருத்தியை கொண்டுநடாத்துவதற்கான அனுமதிப் பத்திரத்துக்காக நான்/நாங்கள் இத்தால் விண்ணப்பிக்கிறேன்/விண்ணப்பிக்கிறோம். நான்/நாங்கள் :——— இல் உள்ள காணியை அல்லது கட்டிடத்தை ——— க்கு உபயோகிக்க எண்ணியுள்ளேன்/எண்ணியுள்ளோம். உபபிரிவின் அமைவிடம் ——— ல் அமைக்கப்பட்டுள்ளது.

நான்/நாங்கள் பின்வரும் விபரங்களை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்/சமர்ப்பிக்கின்றோம்.

1. அந்தந்தக் கூறுகளை, வீதிகள் தொடர்பிலான அமைவிடம் விளக்கும் வரைபடம் (விண்ணப்பத்திற்குரிய அமைவிடமும், விண்ணப்பதாரருக்குச் சொந்தமான அருகிலுள்ள வேறேதேனும் காணியும் தெளிவாகக் காட்டப்படுதல் வேண்டும்).

2. ஏற்கனவே உள்ள எல்லா அருகு அமைப்பினை விபரங்களையும் கட்டிடங்களையும், கட்டமைப்புகளையும் அத்துடன் சூழவுள்ள வீதிகளின் வீதி அகலத்தையும் காட்டும் அமைவிடத்தின் பரிமாணங்களைக் காட்டுவதும் 1 : 4,000க்குக் குறையாததுமான அளவிடைக் கொண்டதுமான அளவீடு செய்யப்பட்ட திட்டம்.

3. அமைவிடம், (ஏற்கனவே உள்ள கட்டிடங்கள் வெளிக்காட்டப்படுதல் வேண்டும்) வீதிக் கோடுகள், வீதியிலிருந்து செல்லுதல், அமைவிடத்தின் எல்லைகள், அனுகுவழிகள் திறந்தவெளிகள் இடவமைவு ஆகியன தொடர்பில் உத்தேசிக்கப்பட்ட கட்டிடத்தின் நிலையினைக் கூறுவதும் 1 : 1,000 அளவுக்குக் குறையாததுமான அளவீடைக் கொண்டதுமான அமைவிடத்தின் விரிவான திட்டம்.

4. (கட்டிட வேலை மட்டும் சம்பந்தப்பட்டதாயின்) :—

(அ) கட்டடத்தின் இடவமைவைக் காட்டப் போதுமான சூழவுள்ள இடப்பரப்பில் உருவரைப்படம் ;

(ஆ) 1 : 4,000 க்குக் குறையாத அளவீடைகொண்ட அளவீடு செய்யப்பட்ட நிலவுடமை திட்டம் ;

(இ) 1 : 100 அளவினை ஒவ்வொரு மாடிக்குமான நிலத்திட்டம், ஆனால் கட்டிடம் மிக விசாலமாயிருக்குமிடத்து பின்வருவனவைக் காட்டுதற்கு 1 : 200 அளவுடைதான திட்டம் பயன்படுத்தப்படலாம்.

(i) கட்டடத்தினதும், அறைகளினதும் கட்டடத்தின் வெவ்வேறு பாகங்களினதும் உருப்பரிமாணங்கள், கட்டடத்தின் ஒவ்வொரு அறையினதும், பாகத்தினதும் எண்ணப்பட்ட உபயோகம் ;

(ii) எல்லாக் கதவுகளினதும், யன்னல்களினதும் ஏனைய வாயில்களினதும் பரிமாணங்களும் நிலைகளும் ;

(iii) எல்லா வடிகால் சாதனங்களினது நிலையும் அவற்றின் வடிகால் இணைப்பும் ;

(iv) தீ வெளியேற்றம் ;

(v) மின்னல் மின்சார வழங்கல் வழிகளிலிருந்து தவிர்த்தல் ;

(vi) கட்டிடத்தின் சுவர்கள், நிலமிசைக்கட்டமைப்பு, நிலத்தளம், அத்துடன் கூரைக் கட்டமைப்பு ஆகியவற்றுக்காகப் பயன்படுத்தப்படவுள்ள பொருட்களின் வகைகளும், அளவுக்குறிப்பீடுகளும்.

(ஈ) பின்வருவனவற்றைக் காட்டுவதும் தேவையானபோதெல்லாம் குறுக்கு வெட்டுகளைத் தெரிவிக்கக் கூடியதுமான கட்டடத்தின் வெட்டு வரைதல் :—

(i) சுவர்களின் தடிப்பு, தளங்கள், கூரை, அத்திவாரங்கள், நீராத்தி அத்துடன் கட்டிடம் சம்பந்தப்பட்ட ஏனைய பாகங்கள் ;

(ii) கதவுகள், யன்னல்கள் அல்லது ஏனைய வாயில்களின் நிலை, பரிமாணங்கள், ஒவ்வொரு மாடியினது உயரம் கூரையின் உட்புறம் அத்துடன் ஏற்கனவே உள்ள தரைமட்டம் அல்லது வீதி மட்டம் சம்பந்தப்பட்ட கட்டடங்களின் மட்டங்கள், அத்துடன் அமைவிட எல்லைகளும் கட்டிடங்களின் வெளிச் சுவர்களுக்குமிடையிலான தூரம்.

(உ) அதன் உயரம், நிலமட்டம் அத்துடன் தொடர்புடைய ஏனைய வெளி அம்சங்களைக் காட்டுவதும், அமைவிடத்தில் ஏற்கனவே உள்ள ஒவ்வொரு கட்டிடத்தின் தோற்றங்களைக் காட்டுவதுமான கட்டடத்தின் முகப்பு, பக்க, தோற்ற உருவம்.

5. இணைப்பு ஆ-1 இல் தரப்பட்டுள்ள விபரங்கள்.

6. இணைப்பு ஆ-2 இல் தரப்பட்டுள்ள விபரங்கள் (அபிவிருத்தி அமைவிடத்தினதும், கட்டிடத்தினதும் உத்தேசிக்கப்பட்ட பயன் சம்பந்தப்பட்டதாயின்).

7. இணைப்பு ஆ-3 இல் தரப்பட்டுள்ள விபரங்கள் (அபிவிருத்தி நடைமுறை சம்பந்தப்பட்டதாயின்).

நான்/நாங்கள் மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும், சரியானவையெனவும் உறுதிப்படுத்துகிறேன்/உறுதிப்படுத்துகிறோம்.

அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்வரை அபிவிருத்திச் செயற்பாட்டைத் தொடக்க மாட்டோம் எனவும் நான்/நாங்கள் உடன்படுகிறேன்/உடன்படுகிறோம்.

——,
சொந்தக்காரரின் கையொப்பம்.

——,
தகைமைபெற்றவரின் கையொப்பம்.
முகவரி :——.
தொலைபேசி :——.
திகதி :——.

படிவம் "ஆ"—இணைப்பு 1.

(தயவுசெய்து தடித்த எழுத்துக்களில் அச்சிடுக)

1. சொந்தக்காரரின் விபரங்கள் :

பெயர் :——.
முகவரி :——.
தொலைபேசி :——.

1. (அ) ஏற்கனவேயுள்ள அபிவிருத்தி பற்றிய விபரங்கள் :

அமைவிடத்தின் இடவமைவு :——
உள்ளூர் அதிகாரசபை :——.
தொகுதி :——.
வீதி :——.
மதிப்பீட்டு இல :——.
காணித்துண்டின் இல/நில அளவைத்திட்ட இல :——

(ஆ) காணியினதும் கட்டிடத்தினதும் தற்போதைய உபயோகம் :

(i) காணி.

அளவு (சதுரமீட்டரில்) :——.
உபயோகம் (தற்போதைய உபயோகத்தை விளக்கிக் கூறுக) :——.

(ii) கட்டிடம் (அமைவிடத்திலுள்ள ஒவ்வொரு கட்டிட விளக்கமும்) :

மாடிகளின் எண்ணிக்கை :——.
உயரம் (மீட்டரில்) :——.
மொத்த நிலப்பரப்பு (சதுரமீட்டர்களில்) :——.

3. உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்தியின் விபரங்கள் :

(அ) உத்தேசங்களின் தன்மை :

(ஆ) அமைவிடம் அபிவிருத்தி :

அமைவிடம் நிலமட்டம் உயர்த்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளதா என்பதைக் குறிப்பிடுக. அவ்வாறாயின், தொகுதியும் வடிகால் உத்தேசங்கள் சம்பந்தப்பட்ட மட்டங்களை விளக்கிக் கூறுக. (ஏற்புடையதாயின்) இலங்கை சீரமைத்தல் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் இசைவு பெறப்பட்டுள்ளதா என்பதையும் தயவுசெய்து குறிப்பிடுக.

(இ) அபிவிருத்தியின் விபரிப்புக்கள் :

ஆகக்கூடிய உயரம் (மீட்டரில்) :——.
எல்லாக் கட்டிடங்களினதும் மொத்த நிலப்பரப்பு (சதுரமீட்டர்களில்) :——.

நிலப்பரப்பு வீதம் (நி. ப. வி.) = எல்லாக் கட்டிடங்களினதும் மொத்த நிலப்பரப்பு / அமைவிடப் பரப்பு

காணித்துண்டு மேவுகை = தரைமட்டத்திலான நிலப்பரப்பு / அமைவிடப் பரப்பு × 100 —

(ஈ) மாடிகளின் எண்ணிக்கை (ஒவ்வொரு மாடியின் அடிக்களமும் கூரையுமும் உள்ளிட்டு).

நிலம். பயன் அளவு (சதுரமீட்டர்கள்)

(உ) நிலப்பரப்பின் விபரிப்புகள் (சதுரமீட்டர்கள்).

வதிவிடம் :———.
சில்லறை வர்த்தகம் :———.
மொத்த வர்த்தகம் :———.
அலுவலகம் :———.
சிற்றுண்டிச்சாலை :———.
தொழிற்சாலை அல்லது வேலைத்தலம் :———.
பண்டகசாலை :———.
ஏனையவை (குறிப்பிடுக) :———.
மொத்தம் :———.

(ஊ) ஒவ்வொரு வதிப்பிடவலைப் பிரிவின் நிலப்பரப்பு :

(எ) வாகனங்கள் நிறுத்துமிடம் :
மோட்டார் கார்கள் :———
ஏனையவை (குறிப்பிடுக) :———.

(ஏ) தேவைப்பாடுகள் :
நீர் (லீட்டர்) :———.
மின்சாரம் (கிலோவாட்) :———.

4. கட்டிடத்திலுள்ள கணக்கிடப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை இல.

5. நிலத்தோற்றம் :—மரங்களும், பயிர்ச்செய்கையும் தொடர்ந்திருக்கப்படுதல் வேண்டும்.

நிலத்தோற்ற உத்தேசங்கள் : வெளிவடிவம் மூலம் உத்தேசங்களை விபரிக்குக. —

6. தோதான தொடக்கத்தேதியும் முடிவுத்தேதியும், காலமும்.

மேற்கூறப்பட்ட விபரங்கள் உண்மையானவையெனவும், சரியானவையெனவும் நான் / நாங்கள் உறுதிப்படுத்துகிறேன் / உறுதிப்படுத்துகிறோம்.

———— ————

தகைமைபெற்ற ஆளின் கையொப்பம். சொந்தக்காரரின் கையொப்பம்.
முகவரி :———.
தொலைபேசி :———.
தேதி :———.

படிவம் "ஆ" — இணைப்பு 2

(தயவுசெய்து தடித்த எழுத்துக்களில் அச்சிடுக) —

அமைவிடமும், கட்டிடமும் தொழிற்சாலைக்காக, வேலைத்தலத்துக்காக அல்லது பண்டகசாலைக்காக் உபயோகப்படுத்தப்படவுள்ளபோது நிரப்பப்பட வேண்டியதும், சேர்த்துதவப்பட வேண்டியதுமானது.

1. தொழிற்சாலை, வேலைத்தலம் அல்லது பண்டகசாலை ஆகியவற்றின் தன்மை (உற்பத்தி செய்யப்படவுள்ள, பழுதுபார்க்கப்படவுள்ள அல்லது களஞ்சியப்படுத்தப்படவுள்ள பொருட்களை விளக்கிக் கூறுக. உற்பத்தி விடயத்தில் மூலப்பொருள் எவ்விதம் உபயோகிக்கப்படவுள்ளதென்பதைக் குறிப்பிட்டு உற்பத்தி நடைமுறை பற்றியும் சுருக்கமாக விளக்கிக் கூறுக.

2 தொழிற்சாலை அல்லது வேலைத்தலத்தை அல்லது பண்டசாலையை நடாத்துவதற்காக சட்டத்தினால் கட்டப்பட்ட அமைச்சின் அல்லது திணைக்களத்தின் அனுமதி பற்றி விளக்கிக் கூறுக.

3. பயன்படுத்தப்படவுள்ள இயந்திரசாதனங்களும் அவற்றின் இயக்கும் சக்தியும்.

இல. குதிரைசக்தி இயக்குமசக்தி.

உள்ளமைப்பு வசதிகளுக்கும் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் :
நீர் — லீட்டர் :———
மூலம் :———.
கழிவுகள் — லீட்டர் :———.
வெளியேற்றம் :———.
மின்சாரம் — கிலோவாட் :———.
மூலம் :———
புயல்நீர் வடிகால் :———.
தீப்பாதுகாப்பு :———.

5. திண்ம, திரவ, வாயு வெளியேற்றுகைகளின் தன்மையும் அளவும், அவற்றைக் கையாளும் முறையும், வெளியேற்றும் முறையும்

6. சத்தம், தூசி, அத்துடன் அதன் அளத்தலைக்கும் தன்மையும் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகளும்.

7. தொழில் :
உத்தேசிக்கப்பட்டது :———.
எதிர்கால விஸ்தரிப்புகள் (ஏதேனுமிருப்பின்) :

மேற்கூறப்பட்ட தகவல்கள் உண்மையானவையெனவும், சரியானவையெனவும் நான் / நாங்கள் உறுதிப்படுத்துகிறேன் / உறுதிப்படுத்துகிறோம்.

———— ————

தகைமை பெற்ற ஆளின் கையொப்பம். சொந்தக்காரரின் கையொப்பம்
முகவரி :———.
தொலைபேசி :———.
தேதி :———.

படிவம் "ஆ" — இணைப்பு 3.

1. அபிவிருத்திச் செயற்பாட்டின் சுருக்கமான விபரிப்பு :

2. அமைவிடத்தின் ஒரு கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கல்வி, சமய கட்டிடங்கள், தொல்பொருள், வரலாற்று, இயற்கைப்பேணல் போன்ற வேண்டிய கட்டிடங்கள், அவற்றின் இடவமைவு.

3. கரையோர நிரந்தர பயிர்ச்செய்கைக் கோட்டிலிருந்து உத்தேசிக்கப்பட்ட கட்டிடத்தின் தூரம்,

4. (அ) ஏற்கனவேயுள்ள பயிர்ச்செய்கையினதும், மேவுகையினதும் தன்மை.

(ஆ) அமைவிடத்திலுள்ள நீர் வழிகள், கல்லமைப்பு, மணல்மேடுகள் போன்ற அத்தகைய தன்மையினவான இயற்கை, பௌதிக அம்சங்களின் விபரிப்புகள்.

5. மீன்பிடி அல்லதுகரையோர பாதுகாப்பு பகுதியில் செய்த ஏதாவது கட்டிடவேலை மேற்கொள்வதற்கான அனுமதியின் விபரங்கள். (கரையோர பாதுகாப்பு சட்டம் 1981 இன் இல 7 இன்படி கரையோர வலயத்தில் கடற்கரையிலிருந்து நிலப்பரப்பை நோக்கி 300 மீற்றருக்குள் ஏதாவது கட்டிடங்கள் கட்டுவதற்கு அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்)

6. உல்லாசப்பயணிகள் விடுதிகள், தங்குமிடங்கள் அத்துடன் சிற்றுண்டிச்சாலைகளுக்கான மேலதிகத் தகவல்கள்.

(அ) அறைகளின் எண்ணிக்கை — தனியறை :———.
— இரட்டையறை :———
— அகேகறை :———.

(ஆ) சிற்றுண்டிச்சாலை ஆசனங்கள்.
சிற்றுண்டிச்சாலை நிலப்பரப்பு (சதுரமீட்டர்) :———.

7. உல்லாசப்பயணச் சபையின் அங்கீகாரம் பற்றிய விபரங்கள்.

8. உள்ளமைப்பு வசதிகளுக்காகச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் :
நீர் .. லீட்டர் :———.
மூலம் :———.
கழிவுகள் — லீட்டர் :———.
வெளியேற்றுமிடம் :———
மின்சாரம் — கிலோவாட் :———
மூலம் ———.
புயல் நீர் வழிகள் :———.
தீப்பாதுகாப்பு :———.
குப்பை வெளியேற்றம் :———

9. தொழில் :

உத்தேசிக்கப்பட்டது :——.

எதிர்கால விரிவாக்கம் (ஏதேனுமிருப்பின்) :——.

மேற்தரப்பட்ட தகவல்கள் யாவும் உண்மையானவையெனவும், சரியானவையெனவும் நான்/நாங்கள் உறுதிப்படுத்துகிறேன்/உறுதிப்படுத்துகிறோம்.

——

தகைமை பெற்ற ஆளின் கையொப்பம்

——

சொந்தக்காரரின் கையொப்பம்.

முகவரி :——.

தொலைபேசி :——.

தேதி :——.

## அட்டவணை I

(ஒழுங்குவிதி 10)

### படிவம் "இ".

உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்திக்காக ஆரம்ப திட்டமிடல் ஒப்புதல் பெறுவதற்கான விண்ணப்பம்.

அலுவலக உபயோகத்துக்கு மட்டும்.

இல. :

செலுத்தப்பட்ட செயன்முறைக் கட்டணம் : ரூ.

பற்றுச்சீட்டு இலக்கமும் தேதியும் :

நகர அபிவிருத்தி சபைத் தவிசாளருக்கு,

மாநகரசபை முதல்வர்/தவிசாளர்/அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஊடாக.

............மாநகரசபை

............நகரசபை

............அபிவிருத்திச்சபை உபபிரிவு.

ஐயா,

............நகரத்தில் ——— தொகுதியில்............ வீதியில்............ மதிப்பீட்டிலக்கத்தையுடைய காணியின்/கட்டடத்தின் உபயோகத்துக்கான ஆரம்ப திட்டமிடலுக்காக.........நான்/நாங்கள் இத்தால் விண்ணப்பிக்கிறேன்/விண்ணப்பிக்கிறோம்.

நானது பிரதிநிதி உள்ளதும் என்னால்/எம்மால் முறைப்படி கையொப்பமிடப்பட்டதுமான பின்வரும் விபரங்களை நான்/நாம் இத்துடன் அனுப்புகிறேன்/அனுப்புகிறோம்.

1. 1 : 6000 அளவுக்கு வரையப்பட்டதும் அருகுள்ள ஆதனங்கள், வீதிகள் சம்பந்தப்பட்டதுமான அமைவிடத்தை/காணியைக் காட்டுவதுமான அமைவிடத்தின் ஒரு வரைபடம். (வீட்டிற்குள்ள அமைவிடம், விண்ணப்பதாரருக்கு சொந்தமான இடப்பரப்பின் உள்ள வேறு ஏதேனும் அமைவிடத்துடன் சேர்த்துத் தெளிவாகக் காட்டப்படுதலும் வேண்டும்).

2. இணைப்புக்களில் விளக்கப்பட்டுள்ள விபரங்கள்.

ஆரம்ப திட்டமிடல் ஒப்புதல் எனக்கு/எமக்கு ஏதேனும் அபிவிருத்திச் செயற்பாட்டைத் தொடர்ந்து நடத்த உரித்துடையதாக்காது என்பதை நான்/நாம் முழுமையாக அறிவேன்/அறிவோம்.

நான்/நாங்கள் சொந்தக்காரரிடமிருந்து பெறப்பட்ட இசைவுக் கடிதத்தை இத்துடன் சேர்த்துள்ளேன்/சேர்த்துள்ளோம்.

மேற்தரப்பட்ட தகவல்கள் உண்மையானவையெனவும், சரியானவையெனவும் நான்/நாங்கள் உறுதிப்படுத்துகிறேன்/உறுதிப்படுத்துகிறோம்.

——.

தகைமை பெற்ற ஆளின் கையொப்பம்.

——.

சொந்தக்காரரின் கையொப்பம்.

தேதி :——.

### படிவம் "இ"– இணைப்பு

(தயவுசெய்து தடித்த எழுத்துக்களில் அச்சிடுக)

1. விண்ணப்பதாரரின் விபரங்கள் :

பெயர் :——.

முகவரி :——.

தொலைபேசி :——.

2. (அ) ஏற்கனவேயுள்ள அபிவிருத்தியின் விபரங்கள் :

இடவமைவு :——.

மதிப்பீட்டு இல. :——.

உள்ளூர் அதிகாரசபை :——.

தொகுதி :——.

வீதி :——.

காணித்துண்டு/நில அளவை திட்ட இல. :——.

(ஆ) தற்போதைய உபயோகம் :

(i) காணி.

அளவு (சதுர மீட்டர்) :——.

உபயோகம் (தற்போதைய உபயோகத்தை விளக்கிக் கூறுக) : ——.

(ii) கட்டடம்

மாடிகளின் எண்ணிக்கை :——.

ஆகக்கூடிய உயரம் (மீட்டர்) :——.

மொத்த நிலப்பரப்பு (சதுர மீட்டர்) :——.

ஒவ்வொரு உபயோகத்தினதும் நிலப்பரப்பு (சதுர மீட்டர்) : ——.

3. உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்தியின் விபரங்கள் :

(அ) அமைவிட அபிவிருத்தி.—அமைவிடம் நிரப்பப்பட்டு உயர்த்தப்படவுள்ளதா என்பதைக் குறிப்பிட்டு, அக்காணியின் தெருக்கள், வடிகால்கள் சம்பந்தப்பட்ட உத்தேச மட்ட விபரங்களையும் தருக. (ஏற்புடையதாகில்) இலங்கைக் காணி சீர்திருத்த அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் இசைவு பெறப்பட்டதா என்பதையும் தயவுசெய்து குறிப்பிடுக.

(ஆ) உத்தேசங்களின் தன்மை (வழித்திட்டங்களுடன், முகப்பையும் சேர்த்து சுருக்கமாக விபரிக்குக.)

4. அமைவிட விபரங்கள்.—அமைவிடத்தின் அளவு (சதுரமீட்டர்)

5. பெறப்படுந்தன்மை

வீதிகளும், சுற்றுவழிகளும் :——

நீர் வழங்கல் :——

கழிகான் :——

மின்சாரம் :——.

6. (அ) உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்தியின் மொத்த நிலப்பரப்பு (சதுர மீட்டர்) :——

(ஆ) மாடிகளின் எண்ணிக்கையும், கட்டடங்களின் ஆகக்கூடிய உயரமும் :——

(இ) நிலப்பரப்பு விதம்—நி.ப.வி. = எல்லாக் கட்டடங்களினதும் மொத்த நிலப்பரப்பு / அமைவிட இடப்பரப்பு

காணித்துண்டு மேவுகை = தரைமட்டத்தில நிலப்பரப்பு x 100 / அமைவிட இடப்பரப்பு

(ஈ) அடர்த்தனம்

(i) அளவு :——

(ii) தனி மேவுகை :——.

(உ) நில இடத்தின் விபரிப்பு (சதுர மீட்டர்)

வதிவிடம் :——

சில்லறை வர்த்தகம் :——

மொத்த வர்த்தகம் :——

அலுவலகம் :——

சிற்றுண்டிச்சாலை :————
தொழிற்சாலை அல்லது வேலைத்தலம் :————
பண்டசாலை :————
ஏனையவை (குறிப்பிடுக) :————
மொத்தம் :————

(ஊ) ஏற்பாடு செய்யப்பட்ட நிறுத்துமிடம்
மோட்டார் கார் :————
ஏனையவை (குறிப்பிடுக) :————

1. அமைதியை வடிவமைப்பின் விபரங்கள் ;

| | சதுர மீட்டர் | மொத்த இடப்பரப்பின் வீதம் |
|---|---|---|
| (அ) காணி உபயோகம் : | ——— | ——— |
| வதிப்பிடம் : | ——— | ——— |
| வர்த்தகம் : | ——— | ——— |
| கைத்தொழில் : | ——— | ——— |
| நிருவகம் : | ——— | ——— |
| திறந்த வெளிகள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் : | ——— | ——— |
| தெருக்கள் : | ——— | ——— |
| ஏனையவை : | ——— | ——— |
| (ஆ) காணித்துண்டுகளின் இல., வகை, அளவு : | ——— | ——— |
| (இ) உத்தேசிக்கப்பட்ட ஏதேனும் கட்டிடத்தின் இல., வகை : | ——— | ——— |
| (ஈ) ஏற்பாடு செய்யப்படவேண்டிய (ஏதேனுமிருப்பின்) வாழ் வசதிகள் : | ——— | ——— |

மேற்குறிப்பிட்ட விபரங்கள் உண்மையானவை யெனவும், சரியானவை யெனவும் நான்/நாங்கள் உறுதிப்படுத்துகிறேன்/உறுதிப்படுத்துகிறோம்.

————
சொத்தக்காரரின் விண்ணப்பதாரரின், கையொப்பம்.

திகதி :————

## அட்டவணை I

படிவம் "ஈ"

(ஒழுங்குவிதி 67)

### இணக்கச் சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பம்

அலுவலக உபயோகத்துக்கு மட்டும்.

இல :————
செலுத்தப்பட்ட செயன்முறைக் கட்டணம் : ரூ. :————
பற்றுச்சீட்டு இல :————
திகதி :————

நகர அபிவிருத்தி அதிகாரசபை தவிசாளருக்கு,
மாநகரசபை முதல்வர்/தவிசாளர்/அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்க்கூடாக.
————மாநகரசபை
————நகரசபை
————அபிவிருத்திச்சபை பகுதி

ஐயா,

19————ஆம் ஆண்டு————த் திகதி————ஆம் இலக்கமிடப்பட்டு எனக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் விதிகளுக்கமைய ————[illegible] இணக்கச் சான்றிதழுக்காக நான்/நாங்கள் இத்தால் விண்ணப்பிக்கிறேன்/விண்ணப்பிக்கிறோம்.

வேலை [illegible] பூர்த்தியாக்கப்பட்டுள்ளது/வேலை பின்வரும் வண்ணம் வழுவி பூர்த்தியாக்கப்பட்டுள்ளது [illegible].

**வழுவு விபரங்கள்**

[illegible] வண்ணம் நான் [illegible] சான்றிதழ் [illegible] :

மேற்குறிப்பிட்டவை [illegible] உண்மையானவையெனவும், சரியானவையெனவும் உறுதிப்படுத்துகிறேன்/உறுதிப்படுத்துகிறோம்.

நான்/நாங்கள் ஏதேனும் அபிவிருத்தி [illegible] எனவும், இணக்கச் சான்றிதழ் பெறும்வரை காணியை/கட்டிடத்தில் குடியேற மாட்டேன்/மாட்டோம் எனவும் உடன்படுகிறேன்/உடன்படுகிறோம்.

————,
தகைமைபெற்ற ஆளின் கையொப்பம்.

————,
சொத்தக்காரரின் கையொப்பம்.

முகவரி :————.
தொலைபேசி :————.
திகதி :————

## அட்டவணை II

### நிறுத்துமிட தரங்கள்

(ஒழுங்குவிதி 31)

| பாவனை | ஆகக்குறைந்த மோட்டார் வண்டி நிறுத்தும் இடம் | | |
|---|---|---|---|
| | கொழும்பு மா. ந. இடப்பரப்பு | ஏனைய மா. ந. இடப்பரப்பு | ஏனைய உள்ளூரதிகார சபை இடப்பரப்பு |
| 1 | 2 | 3 | 4 |
| 1. வதிவிடம் | | | |
| (i) மொத்தத்தில் 200 சதுரமீட்டர் நிலப்பரப்பை விஞ்சும் வதிவிட மனைப் பிரிவு | 1 பிரிவுக்கு 1 | .. 1 பிரிவுக்கு 1 | .. 1 பிரிவுக்கு 1 |
| (ii) மொத்தத்தில் 100 சதுரமீட்டர் நிலப்பரப்பை விஞ்சும் தொடர் மாடிக் கட்டிடங்கள் | 1 பிரிவுக்கு 1 | .. 1 பிரிவுக்கு 1 | .. 1 பிரிவுக்கு 1 |
| (iii) மொத்தத்தில் 100 சதுரமீட்டர் நிலப்பரப்பை விஞ்சாத தொடர் மாடிக் கட்டிடங்கள் | 5 பிரிவுகளுக்கு 1 அல்லது 200 சதுரமீட்டருக்கு 1 ; எது கூடியதோ அது | | |

| பாவனை | ஆகக்குறைந்த மோட்டார் வண்டி நிறுத்தும் இடம் | | |
|---|---|---|---|
| | கொழும்பு மா. ந. இடப்பரப்பு | ஏனைய மா. ந. இடப்பரப்பு | ஏனைய உள்ளூரதிகார சபை இடப்பரப்பு |
| 1 | 2 | 3 | 4 |
| 2. வர்த்தகம் | | | |
| (i) கடைகள், உத்தியோக வகுப்புகளுக்குரிய கடைகள், அலுவலகங்கள் அத்துடன் ஏனைய வர்த்தகக் கட்டடங்கள் | 200 ச. மீட்டருக்கு 1 | .. 200 ச. மீட்டருக்கு 1 | .. 200 ச. மீட்டருக்கு 1 |
| (ii) சிற்றுண்டிச்சாலைகளும் இரவு விடுதிகளும் .. | சிற்றுண்டிப்பகுதியின் இடத்தின் 10 ச. மீட்டருக்கு 1 அல்லது மொத்த இடப்பரப்பின் 5 ச. மீட்டருக்கு 1 ; எது கூடியதோ அது | | |
| (iii) ஹோட்டல்கள், தங்குமிடங்கள், விடுதிகள் .. | நிலப்பரப்பின் 100 ச. மீட்டருக்கு 1 அல்லது 5 அறைகளுக்கு 1 அல்லது 2 ; எது கூடியதோ அது | | |
| 3. சினிமா, நடனசாலைகள், தியேட்டர் அத்துடன் ஒத்த பாவனை கொண்டவை | 20 ஆசனங்களுக்கு 1 | .. 30 ஆசனங்களுக்கு 1 | .. 40 ஆசனங்களுக்கு 1 |
| 4. தொழிற்சாலைகள், கைத்தொழில் தாபனங்கள், அத்துடன் களஞ்சியசாலைகள் | 200 ச. மீட்டருக்கு 1 அத்துடன், 30 மீ. சது மீட்டருக்குக் குறையாத அல்லது 1000 ச. மீட்டரினை 1 லொறி வண்டி நிறுத்துமிடச் சாலைகள் | | |
| 5. நிறுவனங்கள் | | | |
| (i) மருத்துவமனைகளும் தனியார் ஆஸ்பத்திரிகளும் .. | 3 கட்டில்களுக்கு 1 | .. 5 கட்டில்களுக்கு 1 | .. 5 கட்டில்களுக்கு 1 |
| (ii) சோதிப்பு அறைகள் .. .. | 10 சதுரமீட்டர் சோதிப்பு அறை இடத்துக்கு 2 | | .. 10 சதுரமீட்டர் சோதிப்பு அறை இடத்துக்கு 1 |
| (iii) மருத்துவ இரசாயனசாலை .. .. | 100 ச. மீட்டருக்கு 1 | .. 100 ச. மீட்டருக்கு 1 | .. 100 ச. மீட்டருக்கு 1 |
| 6. ஏனையவை .. .. .. | அதிகார சபையினால் அத்தகைய ஒவ்வொரு பயனுக்கும் நிர்ணயிக்கப்படக் கூடியது. ஆனால் அது 200 ச. மீட்டருக்கு 1 க்குக் குறைவானதாயிருத்தலாகாது. | | |

குறிப்பு.—மேற்குறிப்பிட்ட தரங்களில் மோட்டார் வாகன நிறுத்திட எண்ணிக்கை கணக்கிடப்படும்போது அரைவாசிக்கு அல்லது அதற்கு மேற்பட்ட பின்னங்களுக்கும்பட்சத்து அது ஒன்று எனக் கணக்கிடப்படுதல் வேண்டும்.

## அட்டவணை III

(ஒழுங்குவிதி 16)

### படிவம் " அ "

### வதிவிடமனைப் பிரிவுக்கான அணுகுவழி

| ஆக்கப்படவுள்ள வதிவிடமனைப் பிரிவின் எண்ணிக்கை | ஆகக்குறைந்த அகலம் 2 (மீட்டர்) | ஆகக்கூடிய நீளம் 3 (மீட்டர்) |
|---|---|---|
| 4 வதிவிடமனைப் பிரிவுகளுக்குக் குறைந்தவை. .. .. .. | 3.0 .. | 50 |
| 4 க்கு மேற்பட்ட ஆனால் 8க்குக் குறையாத வதிவிட மனைப்பிரிவுகள். .. .. | 4.5 .. | 100 |
| 8 க்கு மேற்பட்ட ஆனால் 12 க்குக் குறையாத வதிவிட மனைப்பிரிவுகள் .. .. | 6.0 .. | — |
| 20 க்கு மேற்பட்ட வதிவிட மனைப் பிரிவுகள் .. .. .. | 9.0 .. | — |

படிவம் "ஆ"

(ஒழுங்குவிதி 16)

வதிவிடமற்ற கட்டடங்களுக்கான அணுகுவழி

| பயன்படும் காணிகளின் ஆகக்கூடிய அளவு (சதுரமீட்டர்) | | ஒவ்வொரு அலகும் நிலையத்தினதும் ஆகக்கூடிய நிலப்பரப்பு வீதம் | வீதியின் ஆகக் குறைந்த அகலம் (மீட்டர்) | வீதியின் ஆகக் குறைந்த நீளம் (மீட்டர்) |
|---|---|---|---|---|
| 500 | (i) | 1.5 | 6.0 | 5.0 |
| 2500 | (ii) | 1.5 | 6.0 | 100 |

(i) வீதியானது ஒன்றுக்கு மேற்பட்ட காணித்துண்டுகளுக்கு அல்லது அமைவிடத்துக்கு, ஆனால் நான்கு காணித்துண்டுகளுக்கு மேற்படாது பாவிக்கப்படுகிறது.

வீதியானது ஒரு காணித்துண்டுக்கு அல்லது ஒரு அமைவிடத்துக்கும் பயன்படுத்தப்படுகிறது.

படிவம் "இ"

(ஒழுங்குவிதி 17)

காணித்துண்டுகளுக்கான அளவுத்திட்டம்

| காணியின் தன்மை | அமைவிடத்தின் ஆகக் குறைந்த நிலப்பரப்பு (சதுரமீட்டர்) | அமைவிடத்தின் ஆகக் குறைந்த அகலம் (மீட்டர்) |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| மேற்குறிப்பிட்டவை தவிர்ந்த ஏனைய எல்லாக் கட்டடங்கள் | 150 | 6 |
| பொதுக்கட்டடக் கட்டடங்களும் பொதுக் கட்டடங்களும் | 300 | 12 |

படிவம் "ஈ"

(ஒழுங்குவிதி 19)

காணிக்கோடுகளுக்கான அளவுத்திட்டங்கள்

| பிரசை வீதியின்வகுதி | ஏதேனும் இருப்பின் அக்கீறின் அல்லது வீதிக் கோட்டின் மத்தியிலிருந்து தொடரும் கட்டடக் கோடு (மீட்டர்கள்). |
|---|---|
| உள்ளூர் | 6.0 |
| இரண்டாந்தரமானது | 9.0 |
| முதன்மையானது | 15.0 |

படிவம் "உ"

(ஒழுங்குவிதி 24)

ஆகக்கூடிய காணித்துண்டு மேவுதல்

| கட்டடத்தின் தன்மை | ஆகக் கூடிய காணித்துண்டின் மேவுகை | நிலமட்டத்தில் ஆகக் குறைந்த திறந்தவெளி. |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| வதிவிடமில்லாப் பிரிவுகள், தொட்டங்கள் விடுதிகள், தங்குமிடங்கள் அத்துடன் பொதுக் கட்டக்கட்டடங்கள் | 66 2/3 | 33 1/3 |
| அலுவலகங்கள், கட்டடங்கள், ஏனைய வர்த்தக, கைத்தொழிற் கட்டடங்கள் | 80 | 20 |

படிவம் "ஊ"

(ஒழுங்குவிதி 1)

திருப்பங்களின் ஆரையின் அகலம்

ஒருவழிப் போக்குவரத்து

| திருப்பும் கோணம் | ஒரு பக்கத்திலுள்ள துண்டுகள் (மீட்டர்கள்) | இரண்டு பக்கத்திலுமுள்ள துண்டுகள் (மீட்டர்கள்) | இருவழிப் போக்குவரத்து (மீட்டர்கள்) |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| இணையான | 3.6 | 3.5 | 6.0 |
| 30 பாகை | 3.6 | 4.3 | 6.3 |
| 45 பாகை | 4.3 | 4.8 | 6.3 |
| 60 பாகை | 4.8 | 4.8 | 6.6 |
| 90 பாகை | 6.0 | 6.3 | 7.3 |

படிவம் "[illegible]"

(ஒழுங்குவிதி 39)

| அறை | ஆகக்குறைந்த அளவு (சதுர மீட்டர்கள்) | ஆகக்குறைந்த நீளம் (மீட்டர்) | ஆகக்குறைந்த அகலம் (மீட்டர்) |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| (i) ஒரு வதிவிடமனையில் ஓர் அறையிருக்கும்போது | 11 | — | 3 |
| (ii) ஒரு வதிவிடமனையில் ஒன்றுக்கு மேற்பட்ட அறை இருக்கும்போது | | | |
| (அ) முதலாவது அறை | 8.5 | — | 2.4 |
| (ஆ) மேலதிக அறைகள் | 7.5 | — | 2.4 |
| (iii) வதிவிடமல்லாத கட்டடங்களின் அறைகள் | 7.5 | — | 2.4 |
| (iv) (அ) சமையலறை | 3.5 | — | 1.8 |
| (ஆ) சமையலறை மாடம் | — | 0.9 | 0.4 |

"படிவம் "ஐ"

(ஒழுங்குவிதி 40)

| அறை | ஆகக் குறைந்த அகலம் (மீட்டர்கள்) | ஆகக் குறைந்த நீளம் (மீட்டர்கள்) |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| குளியலறை | 0.9 | 1.2 |
| கழிவறை | 0.9 | 1.2 |
| குளியலறையும், கழிவறையும் சேர்ந்தது | 0.9 | 1.7 |

படிவம் "ஒ"

(ஒழுங்குவிதி 44)

| வகை | படிக்கட்டின அகலம் (சென்டிமீட்டர்) | ஆகக்குறைந்த தலைக்குமேலுயரம் (மீட்டர்) | எதிர் உயர்த்தி (சென்டிமீட்டர்) | மிதி (சென்டிமீட்டர்) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| (அ) ஒரு மேற்தளத்துக்கு மட்டும் பாவிக்கப்படும் உட்பக்கப் படிக்கட்டு | 75 | 2.0 | 19 | 22.5 |
| (ஆ) பொதுக்கூட்ட இடமாக அல்லது பொதுக் கட்டிடமாகப் பாவிக்கப்படும் கட்டிடத்தின படிக்கட்டு | 105 | 2.1 | 17.5 | 22.5 |
| (இ) ஏனைய எல்லா வகைகளும் | 90 | 2.1 | 17.5 | 22.5 |

படிவம் "ஓ"

(ஒழுங்குவிதி 48)

திறக்கப்படாத வாயில்களின் மொத்த இடப்பரப்பு

| நிரல் I அறை | நிரல் II இயற்கை வெளிச்சம் காற்றோட்டம் புகுவதற் கான திறக்கப்படாத வாயில்களின் மொத்த இடப்பரப்பு | நிரல் III திறக்கப்படக்கூடிய இடப்பரப்பின் சதவீதம் |
|---|---|---|
| (1) குளியலறையும் கழிவறையும் | 1/10 | 100 |
| (2) வாகனம் திருத்தும் கராஜ் | 1/10 | 50 |
| (3) தொழிற்சாலைகளும் பண்டசாலைகளும் | 1/10 | 50 |
| (4) ஏனைய எல்லா அறைகளும் | 1/7 | 50 |

படிவம் "ஔ"

(ஒழுங்குவிதி 58)

பாரந்தூக்கிகளின் அளவுத்திட்டங்கள்

(i) 5 அல்லது அதற்கு மேற்பட்ட மாடிகளையுடைய கட்டிடங்களில் பாரந்தூக்கிகள் (ஆகக்குறைந்தது) பிரதான நுழைவாயிலிலும், பொருத்தமான ஏனை இடங்களிலும் இருத்தல் வேண்டும். பிரதான பாரந்தூக்கி 12—16 பிரயாணிகளைக் கொள்ளக்கூடியதாகவும், ஏனையவை 8—12 பிரயாணிகளைக் கொள்ளக்கூடியதாகவுமிருத்தல் வேண்டும்.

(ii) நடுத்தர வேக பாரந்தூக்கிகள் 5—10 மாடி உயரங்களுக்கு.

(iii) கூடிய வேக பாரந்தூக்கிகள் உயரக்கூடிய கட்டிடங்களுக்கு.

அட்டவணை IV

(ஒழுங்குவிதி 66)

உடனலச் வசதிகளின் ஏற்பாட்டுக்கான தரங்கள்

| | | நீர் கழிப்பிடங்கள் | சிறுநீர் கழிப்பிடங்கள் | கைத்தொட்டிகள் |
|---|---|---|---|---|
| 1 | சினிமா, படமாளிகை, பேரவை மன்று | 400 ஆசனங்கள் வரையிலான ஒவ்வொரு 100 ஆசனங்களுக்கு ஒன்றும், மேலதிக ஒவ்வொரு 250 ஆசனங்களுக்கு அல்லது அதன் பாகத்துக்கும் ஒன்று. ஆண்களுக்கும் பெண்களுக்குமான தனித்தனியே பொருத்தமான வசதிகளுக்கு ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். | ஒவ்வொரு 25 ஆசனங்களுக்கு அல்லது அதன் பாகத்துக்கு ஒன்று | ஒவ்வொரு 5 ஆசனங்களுக்கு அல்லது அதன் பாகத்துக்கு ஒன்று. |
| 2 | சிற்றுண்டிச் சாலை | 200 ஆசனங்கள் வரையிலான ஒவ்வொரு 50 ஆசனங்களுக்கு ஒன்றும், மேலதிக ஒவ்வொரு 100 ஆசனங்களுக்கு அல்லது அதன் பாகத்துக்கு ஒன்று. ஆண்களுக்கும் பெண்களுக்குமென பொருத்தமான தனித்தனி வசதிகளுக்கு ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். | ஒவ்வொரு 50 ஆசனங்களுக்கு அல்லது அதன் பாகத்துக்கு ஒன்று. | ஒவ்வொரு 50 ஆசனங்களுக்கு அல்லது அதன் பாகத்துக்கு ஒன்று. |
| 3 | அலுவலகங்களும், கடைகளும் | 200 ச. மீ. நிலப்பரப்புக்கும் ஒன்று ஆகக்குறைந்தது பெண்களுக்கு ஒன்றும் ஆண்களுக்கு ஒன்றும் என்ப தற்குப்பதி பெண்களுக்கும் ஆண்களுக்கும் பொருத்தமான தனித்தனி வசதிகளுக்கு ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். | ஒவ்வொரு 200 ச. மீட்டர் நிலப்பரப்புக்கு அல்லது அதன் பாகத்துக்கு ஒன்று. | ஒவ்வொரு 200 ச. மீ. நிலப்பரப்புக்கு அல்லது அதன் பாகத்துக்கு ஒன்று. |